பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 16 வியாழக்கிழமை (30-05-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:186

# கண்காணிப்புக் குழுவின் தலைவர் அவசரமாக யாழ்ப்பாணம் வருகிறார்!

## புலிகள் தீவகம் செல்வது குறித்து இரு தரப்பினருடனும் ஆராய

யாழ்ப்பாணம்,மே30

**அரசியல் பணிகளை மேற்கொள்ள விடுதலைப் புலிகள் தீவகம் செல்லும் விடயம் குறித்து எழுந்துள்ள இழுபறி நிலை தொடர்பாக ஆராய யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜெனரல் ரொண்ட் புருகோவிட் அவசர அவசரமாக நாளை யாழ்ப்பாணம் வரவுள்ளார்.**

**இந்த நெருக்கடிக்குத் தீர்வு காண்பது தொடர்பாக கடற்படை, இராணுவ உயர் அதிகாரிகளுடனும் விடுதலைப் புலிகளின் தலைவர்களுடனும் அவர் இதுகுறித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.**

தீவுப் பகுதியில் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் சென்ற விடுதலைப் புலி உறுப்பினர்கள் அல்லைப்பிட்டி சோதனைச்சாவடியில் வைத்துத் திருப்பி அனுப்பப்பட்டனர். தொடர்ந்து புலிகள் தீவகத்துக்குச் செல்ல கடற்படையினர் பல நிபந்தனைகளை விதித்து வருகின்றனர்.

'சயனைட்' குப்பியும், தொலைத் தொடர்புக் கருவியும் இன்றி வரும் விடுதலைப் புலி உறுப்பினர்கள் தீவகத்தில் அரசியல் செயற்பாடுகளை மேற்கொள்ளலாம் என முன்னர் தெரிவித்திருந்த கடற்படையினர், தற்போது பன்னிரண்டு நிபந்தனைகளை

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொது இடங்களிலிருந்து படைகள் உடன் வாபஸ் பெறப்படவேண்டும்

### 'தமிழ் கார்டியனுக்கு' பாலசிங்கம் பேட்டி



லண்டன்,மே30

பாடசாலைகள் மற்றும் பொது இடங்களிலிருந்து படையினர் உடனடியாக வாபஸ் பெறப்படவேண்டும். இல்லையேல் அது கவலைக்குரிய விடயமாக மாறி விடும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம். 'தமிழ் கார்டியன்' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

சமாதானத்துக்கு இணங்காத அரசின் நடைமுறைகளாலும் போர்நிறுத்த உடன்படிக்கையின் முக்கிய அம்சங்களிலிருந்து அரசு விலகி நடப்பதாலும் சமாதான முயற்சிகளைக் குறைத்து

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்களுடன் வந்த இராணுவம்; வாகனேரிப் பகுதி மக்கள் அச்சம்

### கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் முறையீடு

மட்டக்களப்பு,மே30

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான வாகனேரிக்குள் 30 இரணுவ வீரர்கள் ஆயுதங்களுடனும் தொலைநோக்குக் கருவிகளுடனும் நுழைந்தனர் எனக் கூறப்படுகிறது. இது இப்பிரதேச மக்கள் மத்தியில் பீதியையும் பரபரப்பையும் ஏற்படுத்தி உள்ளது.

இராணுவத்தினர் ஆயுதங்களுடன் நடமாடுவது ஒப்பந்தத்தை மீறும் ஒரு செயலாகும் என்று புலிகளின் மட்டககளப்பு மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் துரை கண்டனம் தெரிவித்திருக்கிறார். இது தொடர்பாக கண்காணிப்புக் குழுவினரிடம் அவர் முறைப்பாடு செய்திருக்கிறார்.

கடந்த 24ஆம் திகதி புலிகளின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் சகோதரர்களை காணவில்லை!

வவுனியா,மே30

வவுனியாவைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் காணாமற்போய்விட்டனர் என்று மனித உரிமை ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, முருகனூர் வீதியைச் சேர்ந்த ரகுலேந்திரன் சசிப்பிரியா (வயது11) எனும் சிறுமி கடந்த 13ஆம் திகதி காணாமற்போனார். மறுநாள் (14ஆம் திகதி) இச்சிறுமியைத் தேடிச் சென்ற சிறுமியின் சகோதரர் ரகுலேந்திரன் லோகதிலீபனும் (வயது 17) காணாமற்போய்விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பெற்றோர் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம்

(12ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



வாழ்த்துக் கலாசாரம் இப்ப தெற்குக்கும் போட்டுது போல...

## கோறளைப்பற்று மத்திய பிரதேச செயலர் பிரிவு உருவாக்கம்

# தமிழ், முஸ்லிம் சமூகங்களிடையே குழப்பத்தை ஏற்படுத்த அரசு சதி!

### கரிகாலன் குற்றச்சாட்டு



தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமும் நேரில் சந்தித்து கலந்துபேசி செயது கொண்டுள்ள ஒப்பந்தத்தின்படி மீள் குடியேற்றங்களுக்கு தமிழ், முஸ்லிம் சமூகங்கள் தனித்தனியாகக் குழுக்களை நியமித்து அவற்றின் இணைந்த முயற்சியின்மூலம் காரியம் நடத்த வேண்டும். அப்படியேதும் இல்லாமல் நிலங்களைத் திட்டமிட்டு அபகரித்து கோறளைப்பற்று மத்திய பிரதேச செயலகப்பிரிவு ஏற்படுத்தியிருப்பது இரு சமூகங்களுக்கிடையே குழப்பத்தை உண்டு பண்ணுவதற்கு அரசு செய்த சதி.

- இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட விசேட அரசியல் பொறுப்பாளர் கரிகாலன் குற்றஞ்சாட்டினார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி தொடர்பாக வளங்களைக் கண்டறிந்து திட்டங்களைத் தயாரிக்கும் நோக்குடன் கடந்த செவ்வாய்க்கிழமை அரச திணைக்களத் தலைவர்கள் தரவைக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலைக் கல்வி அமைச்சர் இன்று வருகிறார்

யாழ்ப்பாணம்,மே30

யாழ்ப்பாணத்துக்கான உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு பாடசாலைக் கல்வி அமைச்சர் சுரநிமல ராஜபக்ஷ இன்று இங்கு வருகை தரவுள்ளார்.

இன்று காலை 8 மணிக்கு வருகை தரும் அமைச்சர், பிற்பகல் 3 மணி வரையும் வடமராட்சியில் உள்ள பாட

(12ஆம் பக்கம் பார்க்க)

## அனுருத்தவுக்கு பிணை; வாழ்த்திச் சுவரொட்டிகள்

கொழும்பு,மே30

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, நேற்று தெல்தெனிய நீதிவான் இனோகா ரணசிங்கவினால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அவருக்குப் பிணை வழங்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் அளித்த தீர்ப்பை அடுத்து அவரது சட்டத்தரணிகள் தெல்தெனிய நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.

மனுவை நேற்று விசாரணை செய்த நீதிவான், 25ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் இரண்டு சரீரப் பிணையிலும் அவரை விடுவித்தார். எம்.பிக்களான மகிந்தானந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## 58 மீறல்கள் இடம்பெற்றபோதும் உடன்பாடு முறியாமல் தொடர்கிறது

### கண்காணிப்புக் குழு அறிக்கை

கொழும்பு,மே30

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான யுத்தநிறுத்த உடன்பாட்டை மீறும் வகையில் 58 முறைப்பாடுகள் கிடைத்தபோதும் உடன்பாடு முறியாமல் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு நேற்று விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 15ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாக அந்த அறிக்கையில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இரு தரப்பினரும் யுத்தநிறுத்த உடன்படிக்கையைப் பாதிக்கும் வகையில் செயற்படவில்லை. இதன் காரணமாக உடன்படிக்கை சுமுக

(12ஆம் பக்கம் பார்க்க)

### 'அன்ரனா' பொருத்திய சமயம்

## மின் தாக்குதலுக்கு உள்ளான மற்றொருவர் நேற்று மரணம்

யாழ்ப்பாணம்,மே30

திருநெல்வேலியில் உள்ள தமது வீட்டில் 'அன்ரனா' பொருத்த முயற்சித்த சமயம் மின் தாக்குதலுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த நால்வரில் மற்றுமொருவர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று இரவு மரணமானார்.

திருநெல்வேலி வளாக வீதியைச் சேர்ந்த தனபாலசிங்கம் கலைச்செல்வி (வயது 28) என்பவரே நேற்று உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த இவரது சகோதரரான த.தயாபரன்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

விரைவில் யாழ். குடாநாட்டில்

# மழைநீரைத் தேக்கி குடிதண்ணீராக்க

# ஆஸ்திரேலிய உதவியுடன் திட்டம்!

## நகர பொது வசதிகள் அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே30

குடாநாட்டின் குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் ஆஸ்திரேலியாவின் உதவியுடன் மழைநீரைச் சேமித்துக் குடிதண்ணீராக மாற்றும் தொழில்நுட்பத்தை இங்கு அறிமுகம் செய்யவிருக்கின்றோம் என்று நகர பொது வசதிகள் அமைச்சர் மொஹமட் மஹ்ரூப் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு ஒருநாள் விஜயம் மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்த அவர் யாழ். செயலகத்தில் நடந்த கூட்டத்திலேயே இதைத் தெரிவித்தார்.

யாழ்அரச அதிபர் க.சண்முகநாதன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:-

குடாநாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய நகர அபிவிருத்திப் பணிகளைப் பார்வையிடவே இங்கு வந்துள்ளேன். இங்குள்ள தேவைகளை அறிந்து நகரை புனரமைக்க நடவடிக்கை எடுப்போம்.

வடிகால்களைப் புனரமைத்தல், சூழல் மாசடைதலைத் தடுத்தல் போன்றவற்றுக்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தவிருக்கின்றோம். - என்றார்.

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்துசேர்ந்த அமைச்சர், முதலில் காரைநகர் கிளுவனைக் கேணியைப் பார்வையிட்டார். அந்தக் கேணியில் இருந்து காரைநகருக்கு குடிதண்ணீர் வழங்க நூறு லட்சம் ரூபா செலவிலான திட்டம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

அதன் பின்னர் யாழ்.செயலகம், யாழ்.ஆஸ்பத்திரி ஆகியவற்றுக்கும் அமைச்சர் சென்றார்.

குருநகர் வீடமைப்புத் திட்டத்தை பார்வையிட்ட அமைச்சர் பின்னர் சாவகச்சேரிக்குச் சென்று அங்கு ஏற்பட்ட அழிவுகளைப் பார்த்தார். (ம-3-13-31-51-73)



நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த நகரப் பொது வசதிகள் அமைச்சர் மொஹமட் மஹ்ரூப் காரைநகரில் கிளுவனைக் கேணியைப் பார்வையிடுவதையும், காரைநகருக்கான குடிதண்ணீர்த் திட்டத்துக்கான அடிக்கல்லை நட்டு வைப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் : குகா)

# விதிகளை மீறும் வாகனங்களுக்கு அபராதத்துடன் சேவைக் கட்டணம்

## தபாலகங்களில் அறவிடப்படும்

யாழ்ப்பாணம்,மே30

போக்குவரத்து விதிமுறைகளை மீறும் வாகனங்களுக்கு பொலீஸாரால் அதே இடத்தில் விதிக்கப்படும் தண்டப்பணத்தைத் தபால் அலுவலகத்தில் செலுத்தும்போது, அதனுடன் மேலதிகமாக அபராதத்தொகை யின் 10 வீதமும் சேர்த்து அறவிடப்பட வேண்டும் என்று சகல தபால் அலுவலகங்களையும் தபால் திணைக்களம் பணித்துள்ளது.

இந்த மேலதிகத் தொகையானது, அபராதத்தை அறவிட்டு, அதனை பொலீஸ் திணைக்களத்தில் சேர்ப்பிப்பதற்கான சேவைக் கட்டணம் என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்படி தபால் அலுவலகங்களில் அறவிடப்படும் அபராதத் தொகையும், மேலதிகக் கட்டணமும் தமது தலைமையகத்துக்கு அனுப்பப்படுவதாகவும் -

அங்கு அபராதமாக அறவிடப்பட்ட தொகையை பொலீஸ் திணைக்களத்திற்கு வழங்கிவிட்டு, மேலதிகமாகப் பெற்றுக்கொண்ட தொகையை தபால திணைக்களம் வரவு வைப்பதாகவும்-

இந்த நடைமுறை நாட்டில் உள்ள அனைத்துத் தபாலகங்களுக்கும் பொருந்தும் என்றும் -

யாழ்.தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-ரி)

# அதிகாரிகளின் மெத்தனத்தால் அபராதம் செலுத்த நேரிடுகிறது

## வாகன உரிமையாளர் விசனம்

யாழ்ப்பாணம்,மே30

குடாநாட்டில் அனுமதிப் பத்திரங்கள் மற்றும் இலக்கத்தகடு இல்லாத வாகனங்களுக்கு பொலீஸார் அபராதம் விதிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ள நிலையில் அனுமதிப் பத்திரங்களையோ, புதிய வாகனங்களுக்கு இலக்கங்களையோ வழங்கும் பணியில் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் யாழ்.அலுவலகம் தொடர்ந்து மெத்தனம் காட்டி வருவதாக வாகன உரிமையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த பல வருடங்களாக குடாநாட்டில் வாகனப்பதிவுகளோ அல்லது சாரதி அனுமதிப்பத்திர வழங்கலோ சீராக நடைபெறவில்லை. எனறாவது ஒருநாள் இவற்றை வழங்க கொழும்பில் இருந்து அதிகாரிகள் வருவதும், மிகக் குறைவான எண்ணிக்கையில் அவை வழங்கப்படுவதும் வாடிக்கையாக இருந்து வந்தன.

இந்த நிலையில் அவகாசம் எதுவும் வழங்கப்படாது, வாகன அனுமதிப்பத்திரம் இல்லாமை உட்பட அத்தகைய குற்றங்களுக்கு பொலீஸார் அதே இடத்தில் அபராதம் விதிக்க ஆரம்பித்துள்ளனர்.

இதனையடுத்து பதிவுகளை மேற்கொள்ள அல்லது சாரதி அனுமதிப் பத்திரம் பெற மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள யாழ். அலுவலகத்தைப் பலர் அணுகி வருகின்றார்கள்.

ஆனால், உரிய படிவங்கள் அங்கு இல்லை என்றும் -

அதனால் தம்மால் பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் - இதனால் 350 ரூபா வரை தாம் குற்றப்பணமாகச் செலுத்த வேண்டியிருப்பதாகவும் -

வாகன உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

உடனடியாகக் குற்றப்பணத்தைச் செலுத்தத் தவறுபவர்களின் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொண்டு அவர்களை நீதிமன்றத்துக்கு அழைக்கும் நடைமுறையும் பொலீஸாரால் பின்பற்றப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஒ-13)

## புகைப் பொருள் எதிர்ப்பு தினம்

சர்வதேச புகைப் பொருள் எதிர்ப்புத் தினவிழாவை முன்னிட்டு நாளை வெள்ளிக்கிழமை பிறபகல் 3.30 மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில், வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் தலைவர் சி.இராசலிங்கம் தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் சங்கானை அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.யோகராசா, இளைப்பாறிய மாவட்ட நீதிபதி எம்.திருநாவுக்கரசு, போரூட் நிறுவன யாழ். மேற்கு திட்ட இணைப்பாளர் கே.குணேந்திரதாசன் மற்றும் தீவக திட்ட இணைப்பாளர் வீ.என்.மூர்த்தி, பண்டத்தரிப்பு வைத்தியசாலை வைத்திய அதிகாரி சி. கணேசலிங்கம், சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபர் ச. கைலாசநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தவுள்ளனர். (ம-29)

# சூரிய மின்கலத்துக்கு வாடகை செலுத்தவேண்டாம் என அறிவுறுத்து

குடாநாட்டில் மோட்டோறோலா தொலைபேசிப் பாவனையாளர்கள் தமது சூரிய மின்கலங்களுக்கான வாடகையைச் செலுத்தவேண்டாம் என்று இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கேட்டுள்ளார்.

எதிர்வரும் 15ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவிருக்கும் தொலைத் தொடர்பு ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கருடன் சூரிய மின்கலங்களுக்கு வாடகை செலுத்தும் விடயம் தொடர்பாகக் கலந்துரையாடி இறுதிமுடிவு எடுக்கப்படவிருக்கின்றது என்றும் -

எனவே வாடகையைத் தற்போது செலுத்தவேண்டாம் என்றும் -

அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஐ-3)

# சமூக நலன்புரி அமைச்சின் சமாதான நடமாடும் சேவை

## அமைச்சரும் வருகின்றார்

யாழ்ப்பாணம்,மே30

சமூக நலன்புரி அமைச்சின் சமாதான நடமாடும் சேவை, எதிர்வரும் முதலாம் மற்றும் 2ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சமூக நலன்புரி அமைச்சர் ரவி சமரவீர இந்த நடமாடும் சேவையை ஆரம்பித்து வைப்பதற்கென கொழும்பில் இருந்து வருகை தரவுள்ளார்.

இந்த நடமாடும் சேவையில் பிரதேச செயலகங்களின் சமூகசேவை உத்தியோகத்தர்களால் தெரிவு செய்யப்பட்ட பட்டியலின் பிரகாரம் வலது குறைந்தவர்களுக்கான உபகரணங்களும் வலுவிழந்தோருக்கான வீடமைப்பு உதவியும், சுயதொழில் உதவிப்பணமும் மற்றும் தையல் மெஷின்களும் வழங்கப்படவுள்ளன.

சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில் சேரவிரும்புவோரும், முதியோருக்கான அடையாள அட்டையைப் பெறவிரும்புவோரும் வயோதிபர்களுக்கான மூக்குக் கண்ணாடிகள பெற விரும்புவோரும் குறிப்பிட்ட தினங்களில் சமுகம்தரலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பேச்சுக் குறைபாடு உடைய பிள்ளைகளுக்கான மருத்துவ ஆலோசனைகளும் இந்த நடமாடும் சேவையில் வழங்கப்படவுள்ளது. (க-10)

## திறந்த பல்கலை மாணவருக்கு!

யாழ்ப்பாணம்,மே30

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தில் கற்கை நெறிகளை மேற்கொள்ளும் மாணவர்களை இன்று வியாழக்கிழமை யாழ்.பிராந்திய நிலையத்துக்கு வருகைதருமாறு இயக்குநர் ச.ஆ.ஞானேந்திரன் கேட்டுள்ளார்.

சட்டமாணி, இயந்திரவியல் டிப்ளோமா மற்றும் விஞ்ஞான மாணி மாணவர்களையே வருகை தருமாறு அவர் கேட்டுள்ளார். சட்டமாணி மாணவர்களுக்கான அனுமதிப் பரீட்சை எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு கல்வியங்காடு செங்குந்த இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது என்று தெரிவித்தார். (ம-9)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மே30

அருணோதயாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் நடத்தப்படும் காட்சி உதைபந்தாட்டத்தில் எதிர்வரும் முதலாம் திகதி முதல் நான்கு நாள்களுக்கு மன்னார் மாவட்ட சென்ஜோசெப் விளையாட்டுக் கழகம், யாழ்.மாவட்ட அணிகளுடன் மோதவுள்ளது.

நாளைமறுதினம் சனிக்கிழமை ஊரெழு றோயல் கல்லூரியை எதிர்த்து ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்திலும் -

2ஆம் திகதி பருத்தித்துறை லீக்கை எதிர்த்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்திலும்-

3ஆம் திகதி சென். அன்ரனீஸுக்கு எதிராக, யாழ்.மத்திய கல்லூரி ம்மைதானத்திலும் -

4ஆம் திகதி யங் ஹென்றீஸுக்கு எதிராக அருணோதயக் கல்லூரி மைதானத்திலும் -

மன்னார் மாவட்ட அணி மோதும். (ம-9)

★ ★ ★

வலி.வடக்கு,மே30

யாழ்.மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2மணி முதல் இடம்பெறவுள்ள அரையிறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விபரம் வருமாறு:-

17 வயதுப் பிரிவு .

★ கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.

19 வயதுப் பிரிவு

★ தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் யாழ்.சென்.சாள்ஸ் மகா வித்தியாலயம்.

★ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி எதிர் யாழ்.சென் ஜோசெப் வித்தியாலயம். (ம-86)

★ ★ ★

யாழ்ப்பாணம் கல்வி வலய நல்லூர்க் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையேயான தடகள விளையாட்டுப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி முதல் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (ம-86)

## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,மே30

இலங்கை பெண் சாரணிய மன்றத்தின் யாழ்.மாவட்ட ஒன்றுகூடல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9மணி முதல் மாலை 3 மணி வரை யாழ்.பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

அனைத்து சாரணியர், வழிகாட்டுநர், சிறு தோழர் ஆகியோரை இக் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு யாழ்.மாவட்ட ஆணையாளர் கேட்டுள்ளார். (ம-3)

## கல்வியியல் கல்லூரியில் அரசியல் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே30

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல கல்லூரியில் சமகால அரசியல் நிலை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றது.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் தமிழ்விழி அங்கு சிறப்புரையாற்றினார்.

'ஒரு வெள்ளைப் புறா சிவப்பானது ஏன்' என்ற தலைப்பிலான நாடகமும் அங்கு இடம்பெற்றது. (ம-3)


## விற்பனைக்குண்டு

5 K.M உள் பாவிக்கக்கூடிய Hand Phone (Sanyo model), 16 Hourse Power Pattar Engine England, அல்டர் கிறைன்டர் மெஷின், ஈர அரிசி அரைக்கும் புதிய மெஷின் ஒன்றும் விற்பனைக்குண்டு.

தொடர்புகொள்ளவும்.

*79, பத்திரகாளி கோயிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.* (C/22335)

இ.ஸ்ரீதரன், வேணுகா தொலைத் தொடர்பகம்.


## மரண அறிவித்தல்

### திருமதி செல்லத்துரை றோசம்மா

17/1,மருதடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி செல்லத்துரை றோசம்மா அவர்கள் 28.05.2002 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லத்துரையின் அன்பு மனைவி ஆவார். அவரது நல்லடக்க ஆராதனை இன்று (30.05.2002) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் பெரியமாதா கோயிலில் நடைபெற்றுப் பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குணசிங்கம் (மகன்)
ஜெயராசா (மகன்)

*17/1, மருதடி வீதி, யாழ்ப்பாணம்.* (4332)

# உளவுச் செயற்கைக்கோளை இஸ்ரேல் விண்ணுக்கு அனுப்பியது

டெல்அவிவ்,மே30

உளவுப் பணியில் உதவும் செயற்கைக் கோளை இஸ்ரேல் விண்ணிற்கு அனுப்பியுள்ளது. 'ஒவெக்-5' என்று பெயரிடப்பட்ட இந்தச் செயற்



கைக்கோள், சுற்றியுள்ள அரபுநாடுகளைக் குறிப்பாகப் பலஸ்தீனப் பகுதிகளைக் கண்காணிக்க இஸ்ரேலுக்கு உதவும் என்று கூறப்படுகிறது.

இந்தச் செயற்கைகோளில் பொருத்தப்பட்டுள்ள சக்திவாய்ந்த புகைப்படக் கருவிகள் மற்றும் பிற நவீன சாதனங்கள் மூலம் இஸ்ரேலைச் சுற்றியுள்ள பிராந்தியத்தில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகளை இஸ்ரேலில் உள்ள இராணுவத் தலைமையகம் உடனடியாகத் தெரிந்துகொள்ள முடியும்.

உளவுப் பணிகளில் இஸ்ரேல் பயன்படுத்திய 'ஒவேக்-3' என்ற செயற்கைக்கோள் கடந்த ஆண்டு விண்ணில் எரிந்ததையடுத்தே புதிய செயற்கைக்கோளை இஸ்ரேல் விண்ணுக்கு அனுப்பியுள்ளது.

(ஒ)

# குண்டுவெடிப்புகளால் குஜராத் அதிர்ந்தது!

புதுடில்லி,மே30

இந்தியாவின் குஜராத் மாநிலத் தலைநகர் அஹமதாபாத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற மூன்று வெவ்வேறு குண்டுவெடிப்புகளில் 12பேர் படுகாயமடைந்தனர்.

காலை வேளையில், அலுவலகங்கள், பாடசாலைகளுக்குச் செல்வோர் மற்றும் அன்றாடப் பணிகளுக்குப் போவோர் என மக்கள் நடமாட்டம் மிகுந்திருந்த சமயத்தில் இடம்பெற்ற இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவங்களால் குஜராத் அதிர்ந்துபோனதாக இந்திய வானொலி வர்ணித்தது.

பகல் 10மணியளவில் இருவேறு இடங்களில் சென்றுகொண்டிருந்த இரண்டு அரச பஸ்களில் குண்டுகள் வெடித்தன. இந்தக் குண்டு வெடிப்புகளைத் தொடர்ந்து சில நிமிடங்களில் நகரின் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதிகளில் மற்றொரு குண்டு வெடித்தது.

இந்தச் சம்பவங்களுக்குக் காரணமானவர்கள் யார் என்பது குறித்த தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை.

கடந்த பெப்ரவரி மாதம் முதல் குஜராத்தில் இந்து - முஸ்லிம் மதக் கலவரத்தில் ஆயிரம் பேர் வரை உயிரிழந்துள்ள நிலையில் இந்தக் குண்டுவெடிப்புகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஒ)

# வாஜ்பாயின் வீட்டில் துப்பாக்கி வெடித்தது!

புதுடில்லி,மே30

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்த இல்லத்தில் நேற்றுமுன்தினம் துப்பாக்கி வெடித்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இமாசலப் பிரதேசத்தில் உள்ள குறுமனாலியில் வாஜ்பாய் ஓய்வுக்காகத் தங்கியிருந்த இல்லத்திலேயே இந்தச் சம்பவம் இ[illegible]ற்றுள்ளது.

இது தொடர்பாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டபோதும் [illegible]ஸார் இதனை மூடி மறைத்[illegible]தாகக் கூறப்படுகிறது.

வாஜ்பாய் வீட்டில் பாதுகாப்புப்



பணியில் ஈடுபட்டிருந்த பொலீஸாரில் ஒருவர் பணி மாறியபோது, தன வசமிருந்த தானியங்கித் துப்பாக்கியை மற்றொரு பொலீஸாரிடம் ஒப்படைத்தபோது, தவறுதலாக விசை தட்டுப்பட்டதால் சரமாரியாகக் குண்டுகள் பாய்ந்ததாகக் கூறப்படுகிறது. ஆயினும் அதிர்ஷ்டவசமாக யாருக்கும் காயம் ஏற்படவில்லை. (ஒ)

# ஐரோப்பிய நாடுகளைத் தாக்க அல்கெய்டாவினர் பாரிய திட்டம்

## ஜேர்மன் பொலீஸ் எச்சரிக்கை

ஐரோப்பிய நாடுகளில் தீவிரவாதத் தாக்குதல்களை மேற்கொள்ள ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா அமைப்பு திட்டம் தீட்டியுள்ளதாக ஜேர்மன் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

கடந்த சில மாதங்களில் ஐரோப்பிய நாடுகளில் தமது அமைப்புக்கு ஆள்களை இரகசியமாக அல்கெய்டாவினர் திரட்டியுள்ளதாகவும் -

அவர்கள் தீவிரவாதத் தாக்குதல்களை மேற்கொள்ளத் தயார்ப்படுத்தப்பட்டுள்ளதாகவும் -

ஜேர்மனிய பொலீஸ்துறைத் தலைவர் மான் பிரட் கிளின்க், பொன் நகரில் இடம்பெற்ற ஐரோப்பிய பாதுகாப்பு நிபுணர்களின் மாநாட்டில் தெரிவித்தார்.

இதேவேளை, தாக்குதல் திட்டத்துடன் தமது தலைவரின் கட்டளைக்காகக் காத்திருக்கும் அல்கெய்டா உறுப்பினர்கள் மறைந்துள்ள இடங்களைக் கண்டுபிடிக்க முடியாமல் உள்ளதாகவும் -

ஆனால், அடையாளம் காணப்படாத அவர்கள் மக்களோடு மக்களாகவே இருப்பதாகவும் -

கிளின்க் மேலும் குறிப்பிட்டார்.

# அமெரிக்கக் ஹெலிகள் மீது பிலிப்பைன்ஸில் தாக்குதல்!

மணிலா,மே30

தெற்கு பிலிப்பைன்ஸில் அமெரிக்கக் கடற்படையின் இரண்டு ஹெலிகொப்டர்கள் தாக்குதலுக்குள்ளாகியதாகக் கூறப்படுகிறது. ஆனால் அமெரிக்க இராணுவம் இதனை மறுத்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு அமெரிக்கக் ஹெலிகள் தெற்குப் பிலிப்பைன்ஸில் இஸ்லாமியத் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்கானதாகப் பிலிப்பைன்ஸ் இராணுவம் அறிவித்திருந்தது.

ஆனால், அத்தகைய சம்பவம் எதுவும் இடம்பெறவில்லை, என அமெரிக்கக் கடற்படை தெரிவித்ததையடுத்து தமது அறிவிப்புத் தவறானதென்று கூறிய பிலிப்பைன்ஸ் இராணுவம் அதற்காக மன்னிப்பும் கோரியது.

தெற்குப் பிலிப்பைன்ஸில் பெரும்பான்மையாக வாழும் இஸ்லாமியர்களின் உரிமைகளுக்காகப் போராடிவரும் இஸ்லாமியத் தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பிலிப்பைன்ஸ் இராணுவத்தினருக்கு உதவும் முகமாக அப்பகுதியில் சுமார் ஆயிரம் அமெரிக்க இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஒ)

# ஆப்கானில் உதவிப்பணி முடக்கம்; போதுமான நிதி வசதி இல்லையாம்

காபூல்,மே30

சர்வதேச உதவிகள் போதுமான அளவு கிடைக்காததால் ஆப்கானில் தாம் மேற்கொள்ளும் உதவிப் பணிகளை நிறுத்தவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளதாக உதவி நிறுவனங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

குடிபெயர்ந்தோருக்கான சர்வதேச அலுவலகம், ஐ.நாவின் உலக உணவுத் திட்டம் போன்ற நிறுவனங்களே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளன. தமது உணவு உட்பட அத்தியாவசியத் தேவைகளுக்காக உதவி நிறுவனங்களையே நம்பியுள்ள சுமார் 90 லட்சம் ஆப்கானியர்கள் இதனால் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஈரான், பாகிஸ்தான் போன்ற நாடுகளில் தஞ்சமடைந்திருந்த ஆப்கான் அகதிகளை நாடு திரும்ப வேண்டாம் என்று கோரப்படுவதாகவும் கூறப்படுகிறது.

நிதிப் பற்றாக்குறையால் வடக்கு மற்றும் மேற்கு ஆப்கானிஸ்தானில் உள்ள மிகவும் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு உணவுப் பொருள்களைக் கொண்டு செல்வது நிறுத்தப்பட்டுவிட்டது. ஏற்கனவே அப்பகுதிகளுக்கு கொண்டு செல்லப்பட்ட பொருள்களே தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

(ஒ)



ஈரானில் இருந்து நாடு திரும்பும் ஆப்கான் அகதிகள்

# பலஸ்தீனர் சூட்டதில் 3இஸ்ரேலியர் பலி!

நப்லஸ்,மே30

மேற்குக்கரை நகரான நப்லஸ் அருகே உள்ள ஒவ்ரா யூதக் குடியிருப்பில் பலஸ்தீனத் துப்பாக்கிதாரி மேற்கொண்ட தாக்குதலில் 3பேர் உயிரிழந்தனர்.

குடியிருப்பின் யூதமதப் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களே உயிரிழந்தவர்களாவர். மற்றுமொரு மாணவன் இந்தச் சம்பவத்தில் காயமடைந்துள்ளார்.

குடியிருப்பின் வீதி வழியே வந்து கொண்டிருந்த பலஸ்தீனர் திடீரென்று தான் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து சரமாரியாகச் சுட்டதாகவும் -

இறுதியில் துப்பாக்கிதாரி சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இஸ்ரேலின் பல பகுதிகளையும் சேர்ந்த மாணவர்கள் தமது கட்டாய இராணுவப் பயிற்சியில் ஒரு கட்டமாக மேற்படி பாடசாலையில் கற்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவம் இடம்பெறுவதற்கு சில மணித்தியாலங்கள் முன்னதாக மேற்குக்கரையின் மற்றொரு பகுதியில் இரு இஸ்ரேலியர்கள் பயணித்த கார் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார்; மற்றவர் காயமடைந்தார். (ஒ)



தாக்குதலுக்குள்ளான காரை சோதனையிடும் இஸ்ரேலியப் பொலீஸார்.

# உலகக் கிண்ணப் போட்டி

## முதற்சுற்று விவரங்கள் (இலங்கை நேரப்படி)

| | திகதி | நேரம் | மோதும் நாடுகள் | | | நாடு | மைதானம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 31.05.2002 | பி.ப.5.30 | பிரான்ஸ் | - | செனகல் | கொரியா | சோல் |
| 02 | 01.06.2002 | பி.ப.3.00 | உருகுவே | - | டென்மார்க் | கொரியா | உல்சன் |
| 03 | 01.06.2002 | பி.ப.4.00 | ஜேர்மனி | - | சவூதி அரேபியா | ஜப்பான் | சப்பாரோ |
| 04 | 01.06.2002 | ந.ப.12.00 | அயர்லாந்து | - | கெமரூன் | ஜப்பான் | நிகாடா |
| 05 | 01.06.2002 | பி.ப.5.00 | ஸ்பெயின் | - | சிலோவெனியா | கொரியா | குவான்சு |
| 06 | 02.06.2002 | பி.ப.1.30 | பரகுவே | - | சவூதி அரேபியா | கொரியா | புன் |
| 07 | 02.06.2002 | மு.ப.11.00 | ஆர்ஜென்ரீனா | - | நைஜீரியா | ஜப்பான் | இபராகி |
| 08 | 02.06.2002 | பி.ப.3.00 | இங்கிலாந்து | - | சுவீடன் | ஜப்பான் | சத்மா |
| 09 | 03.06.2002 | ந.ப.12.00 | குரோஷியா | - | மெக்சிக்கோ | ஜப்பான் | நிகாடா |
| 10 | 03.06.2002 | பி.ப.3.00 | பிரேஸில் | - | துருக்கி | கொரியா | உல்சன் |
| 11 | 03.06.2002 | ந.ப.12.30 | இத்தாலி | - | ஈக்குவடோர் | ஜப்பான் | சப்பாரோ |
| 12 | 04.06.2002 | பி.ப.2.30 | ஜப்பான் | - | பெல்ஜியம் | ஜப்பான் | சத்மா |
| 13 | 04.06.2002 | பி.ப.3.00 | சீனா | - | கோஸ்டறிக்கா | கொரியா | குவான்சு |
| 14 | 04.06.2002 | பி.ப.5.00 | கொரியா | - | போலந்து | கொரியா | புன் |
| 15 | 05.06.2002 | பி.ப.3.00 | அமெரிக்கா | - | போர்த்துக்கல் | கொரியா | சுவொன் |
| 16 | 05.06.2002 | பி.ப.5.00 | ஜேர்மனி | - | அயர்லாந்து | கொரியா | இபராகி |
| 17 | 05.06.2002 | பி.ப.5.00 | ரஷ்யா | - | ரீயுனிஷியா | ஜப்பான் | கோபே |
| 18 | 06.06.2002 | ந.ப.12.30 | டென்மார்க் | - | செனகல் | கொரியா | டியாகு |
| 19 | 06.06.2002 | பி.ப.2.30 | கெமரூன் | - | சவூதி அரேபியா | ஜப்பான் | சத்மா |
| 20 | 06.06.2002 | பி.ப.5.30 | பிரான்ஸ் | - | உருகுவே | ஜப்பான் | புன் |
| 21 | 07.06.2002 | ந.ப.12.30 | சுவீடன் | - | நைஜீரியா | ஜப்பான் | கோபே |
| 22 | 07.06.2002 | பி.ப.3.00 | ஸ்பெயின் | - | பரகுவே | கொரியா | ஜீ ஒன்சு |
| 23 | 07.06.2002 | பி.ப.5.00 | இங்கிலாந்து | - | ஆர்ஜென்ரீனா | ஜப்பான் | சப்பாரோ |
| 24 | 08.06.2002 | ந.ப.12.30 | தென் ஆபிரிக்கா | - | ஸ்லோவினியா | கொரியா | டெகு |
| 25 | 08.06.2002 | பி.ப.2.30 | இத்தாலி | - | குறோஷியா | ஜப்பான் | இபராகி |
| 26 | 08.06.2002 | பி.ப.5.30 | பிரேஸில் | - | சீனா | கொரியா | சிக்வீயு |
| 27 | 09.06.2002 | ந.ப.12.00 | மெக்சிக்கோ | - | ஈகுவடோர் | ஜப்பான் | மியாகி |
| 28 | 09.06.2002 | பி.ப.3.00 | கோஸ்டறிகா | - | துருக்கி | கொரியா | இஞ் ஆன் |
| 29 | 09.06.2002 | பி.ப.5.00 | ஜப்பான் | - | ரஷ்யா | ஜப்பான் | யொ கொ ஹாமா |
| 30 | 10.06.2002 | ந.ப.12.30 | கொரியா | - | அமெரிக்கா | கொரியா | டெகு |
| 31 | 10.06.2002 | பி.ப.2.30 | ரீயுனிஷியா | - | பெல்ஜியம் | ஜப்பான் | ஒய்டா |
| 32 | 10.06.2002 | பி.ப.5.30 | போர்த்துக்கல் | - | போலந்து | கொரியா | ஜீ ஆன் யு |
| 33 | 11.06.2002 | ந.ப.12.30 | டென்மார்க் | - | பிரான்ஸ் | கொரியா | இன் சொன் |
| 34 | 11.06.2002 | ந.ப.12.30 | செனகல் | - | உருகுவே | கொரியா | சுவொன் |
| 35 | 11.06.2002 | பி.ப.5.00 | சவூதி அரேபியா | - | அயர்லாந்து | ஜப்பான் | யொ கொ ஹாமா |
| 36 | 11.06.2002 | பி.ப.5.00 | கெமரூன் | - | ஜேர்மனி | ஜப்பான் | சீ சூகா |
| 37 | 12.06.2002 | ந.ப.12.30 | சுவீடன் | - | ஆர்ஜென்ரீனா | ஜப்பான் | மியாகி |
| 38 | 12.06.2002 | ந.ப.12.30 | நைஜீரியா | - | இங்கிலாந்து | ஜப்பான் | ஒசாகா |
| 39 | 12.06.2002 | பி.ப.5.30 | தென் ஆபிரிக்கா | - | ஷ்பெயின் | கொரியா | டெய்ஜீ ஆன் |
| 40 | 12.06.2002 | பி.ப.5.30 | ஸ்லோவினியர் | - | பரகுவே | கொரியா | சிக் வீயு |
| 41 | 13.06.2002 | ந.ப.12.30 | துருக்கி | - | சீனா | கொரியா | சோல் |
| 42 | 13.06.2002 | ந.ப.12.30 | கோஸ்டறிகா | - | பிரேஸில் | கொரியா | சுவொன் |
| 43 | 13.06.2002 | பி.ப.5.00 | ஈக்குவடோர் | - | குறோஷியா | ஜப்பான் | யொ கொ ஹாமா |
| 44 | 13.06.2002 | பி.ப.5.00 | மெக்சிக்கோ | - | இத்தாலி | ஜப்பான் | ஒய்டா |
| 45 | 14.06.2002 | ந.ப.12.00 | பெல்ஜியம் | - | ரஷ்யா | ஜப்பான் | சுனேகா |
| 46 | 14.06.2002 | ந.ப.12.00 | ரீயுனிஷியா | - | ஜப்பான் | ஜப்பான் | ஒசாகா |
| 47 | 14.06.2002 | பி.ப.5.00 | போர்த்துக்கல் | - | கொரியா | கொரியா | இன்சொன் |
| 48 | 14.06.2002 | பி.ப.5.00 | போலந்து | - | அமெரிக்கா | கொரியா | டெய்ஜீ ஆன் |

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பலஇன கலர்மீன்கள், மீன தொட்டிகள், மீன்தொட்டிக்குரிய மோட்டர்கள், அழகுசாதனப் பொருள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 40/17, சீனியர் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (4243)

சண்டிலிப்பாய், பொன்னாலை வீதியில் 8 பரப்பு, 18 பரப்புக்காணி சம துண்டுகளாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.சுதாகரன், 40/3, புகையிரதப்பாதை கிழக்கு ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்; மது, டச் வீதி, சண்டிலிப்பாய். (4265)

Nokia கான்போன் $A_3$ 125m லெமனேற்றிங் பேப்பர், லெமனேற்றிங் மிசின் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.குமார், K.K.S றோட், கொக்குவில். T.P: 2961 (4302)

சவாரிக்கு ஏற்ற வடக்கன்மாடு (2ஆண்டு). தொடர்பு:- க.தவநாகேஸ்வரன் (ராசன்), 6ஆம் வட்டாரம், சிற்பனையடி, வேலணை மேற்கு. (4277)

பிறிமா புறொயிலர் குஞ்சுகள் கொழும்பிலிருந்து தருவிக்கப்படவுள்ளன. பதிவுகளை முன்கூட்டியே செய்துகொள்ளவும். 19, முருகேசர் லேன், முத்திரைச் சந்தையடி, நல்லூர். (4298)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. இலவசமாகச் சுத்தம்செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி, வட்டக்குளம் முன்பாக, கட்டப்பிராய். (4273)

## பிறிமா கோழிக்குஞ்சுகள்

பிறிமா கைலைன் வெள்ளை பேட்டுக் குஞ்சுகளும், புறொயிலர் குஞ்சுகளும் எம்மிடம் பதிவுசெய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகள்: மாருதி ரெக்ஸ், இல.1, பஜார் வீதி, யாழ்ப்பாணம்; சிற்றி காமென்ஸ், 535A, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (4171)

பிறிமா ஹைலைன் பிறவுண் வெள்ளை பேட்டுக்குஞ்சுகள் ரூபா40/-, புறொயிலர் குஞ்சுகள் ரூபா 30/- விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 'மல்லிகாபதி' மானிப்பாய். (C/22292)

## ஆங்கிலக்கல்வி

சுலபமான முறையில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க அடிப்படையிலிருந்து இலக்கணத்துடன் கற்பிக்கப்படும். வீடுகளுக்கு வந்து கற்பிக்க முடியும். தொடர்பு: இ.தேவதாஸ், 23i, கோவில் வீதி, நல்லூர். (4289)

## தவறிவிட்டது

அல்லாரை தெற்கு, மீசாலையைச சேர்ந்த வல்லிபுரம் பவளராணி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.598264082V), விசேட அடையாள அட்டை (இல.091013675) என்பன சிறிய சிவப்பு நிற பாக்குடன் 27-05-2002 அன்று திருநெல்வேலிக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ்.நகரில் உள்ள V.M.K. கணபதிப்பிள்ளை நகைமாடத்தில் ஒப்படைத்து உதவவும். (4285)

## தேவை

புதிதாக ஆரம்பித்துள்ள உணவகத்திற்கு ஐஸ்கிறீம், சுவீட்ஸ் தயாரிக்கும் அனுபவமுள்ளவர்களும் சமையல் வேலையாள்களும், பரிமாறுவோரும் தேவை. நேரில் வரவும். இமகேஸவரன், 302, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். (4294)

## கையாடப்பட்டுவிட்டது

கடந்த 25-05-2002 மாலை கொக்குவில் தலையாளி ஒழுங்கையில் நீலநிற Yamaha V80 இலக்கம் NPGh, 5970, இஞ்சின் இல. 5491762, செசி இல.5491980 என்ற மோட்டார் சைக்கிள் கையாடப்பட்டுவிட்டது. அதைப்பற்றி தகவல் அறிந்தோர் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். விளம்பர இல.1528, மே/பா உதயன். (4297)

## புத்தகங்கள்

அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள்: 1.நாடகம் எழுதுவது எப்படி? 2.யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடகம் 3.யாழ்ப்பாணம் சிறு கதைகள் 4.இலக்கியக் கட்டுரைகள் 5.வீடற்றவன் நாவலின் விளக்கமும் விமர்சனமும் இலக்கிய விமர்சனம், 6.ஒரு காதலின் கதை நாவல். (4268)

## செயலமர்வு

யாழ் இந்துக் கல்லூரியில் உள்ள தொலைக்கல்வி நிலையத்தின் செயலமர்வு எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாக நிலையத்தின் சிரேஷ்ட போதனாசிரியர் அறிவித்துள்ளார்.

இச் செயலமர்வில் சகல ஆசிரிய மாணவர்களையும் விரிவுரையாளர்களையும் கலந்துகொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (க-10)

## பெறுமதிமிக்க முத்திரைகள்

யாழ். பிரதம தபாலகத்துக்கென உயர் பெறுமதி வாய்ந்த முத்திரைகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

500ரூபா மற்றும் 1000 ரூபா பெறுமதிவாய்ந்த இந்த முத்திரைகளை இன்று தொடக்கம் பொதுமக்கள் பெற்றுக் கொள்ளலாம் என்று பிரதம தபாலதிபர் அறிவித்துள்ளார்.(க-10)

# கண்ணீர் அஞ்சலி

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவரும்.
யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான
**திரு.அ.விநாயகமூர்த்தி**
அவர்களின் பாசமிகு பாரியார்

**திருமதி தையல்நாயகி விநாயகமூர்த்தி**

அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைவதோடு, துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

*தெடுத்தனை,*
*கரவெட்டி கிழக்கு,*
*கரவெட்டி.*
(4310)

**சி.கந்தவனம்**
**குடும்பத்தினர்.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
20 - 05 - 1951



உதிர்வு
30 - 04 - 2002

**திருமதி அரியராணி சிவசுப்பிரமணியம்**

எங்கள் குடும்பக் குல விளக்கே! ஒளிச் சுடரே!
தீபம்தான் அணைந்ததோ அம்மா?
உன் திருவுருவம்தான் மறைந்ததோ தாயே!
அன்பான கணவரும் நீங்கள் அரவணைத்த நேசமுள்ள
பிள்ளைகளும் பாசமிகு மருமகனும் கலங்கி நிற்க
எங்குதான் சென்றீர்கள் அன்னையே?
உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

- கணவர்,
பிள்ளைகள், மருமகன்.

*70/3, அரசடிப்பிள்ளையார் வீதி,*
*நாயன்மார்கட்டு,*
*யாழ்ப்பாணம்.*
(4307)

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
1961 - 10 - 02



ஆண்டவன் அடியில்
1996 - 06 - 05

**அமரர் நடராஜா சேகர்**

*(சேகர்ஸ் றெக்கோடிங் பார் உரிமையாளர் - நெல்லியடி)*

**திதி: 2002-05-30**

ஆறாண்டு காலமாக உம் திருமுகம் காணாது
ஆறாது நாம் இன்றும் மூழ்குகிறோம் கண்ணீரில்!
கூடிக்கு மேல் இடி விழுந்து இறுகிய எம்மிதயம்
இவ்விடியைத் தாங்காது வெடிக்குதே இவ்வுலகில்!!
*ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கும்:*

*"மிதிலை"*
*கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.*

-குடும்பத்தினர்.

(4308)

# ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
01 - 01 - 1954



இறப்பு
07 - 06 - 1993

**நகுலராஜா நகுலேஸ்வரி**

(அம்பன், குடத்தனை)

*திதி: சதுர்த்தி 30.05.2002*

ஆண்டுதான் ஒன்பது சென்றாலும்
ஆறுமோ எம் துயரம்
இன்முகத்துடன் எல்லோரையும்
வரவேற்கும் உங்களை மறக்கமுடியுமா?
*உமது ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.*
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

- குடும்பத்தினர்.

*நகுலேஸ்வரி அரைக்கும் ஆலை,*
*நகுலேஸ்வரி தொலைத் தொடர்பகம்,*
*அம்பன், குடத்தனை. T.P.070-21-3002*
(4301)


# யூனியன் அஷ்யூரன்ஸ்

நட்புடன் கூடிய செயல்திறன்மிக்க
ஆயுள் காப்புறுதி,
பொதுக் காப்புறுதிச் சேவைகள்
இதுவே
யூனியன் அஷ்யூரன்ஸ்
139, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 3753

ஆயுள் முழுவதும் உங்களைக் காப்போம்

(C/22327)

உதயன்

# கூடாரத்தினுள் ஒட்டகம் நுழைகிறது!

இலங்கை அரசு, அமெரிக்க அரசுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொள்ளப்போகிறது என்றும் -

அந்த ஒப்பந்தப்படி இலங்கை வான்பரப்பையும் கடற்பரப்பையும் முறையே அமெரிக்க விமானங் களும் கப்பல்களும் சுதந்திரமாகப் பயன்படுத்த வசதி கிடைக்கும் என்றும் -

இலங்கை அரசு அமெரிக்காவிடம் இருந்து நவீன ஆயுதங்கள், உபகரணங்கள் ஆகியவற்றை பெற்றுக் கொள்ளும் என்றும் -

இலங்கைப் படையினருக்கு அமெரிக்கா விசேட பயிற்சிகளை அளிக்கும் என்றும் பத்திரிகைகளில் செய் திகள் வெளிவந்ததுதான் தாமதம். செய்தியை அச் சடித்த மை காயும் முன்னரே அவசர அவசரமாக மறுப்பு வெளியிடப்பட்டுவிட்டது. பாதுகாப்பு அமைச் சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ மறுப்பை வெளியிட்டிருக்கிறார்.

அமெரிக்க அரசுடன் இலங்கை அரசு பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொள்ளாது. சேவை ஒப்பந்தம் செய்துகொள்வது பற்றியே இப்போது கருத்துப் பர மாறப்பட்டு வருகிறது என்று அவர் தெரிவித்திருக் கிறார்.

அமெரிக்கக் கப்பல்களுக்கும் விமானங்களுக்கும எண்ணெய் நிரப்புவதற்கும், கப்பல்கள், விமானங் கள் ஆகியவற்றில் கோளாறு ஏற்படும் பட்சத்தில் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கும் வசதி யாகவே சேவை ஒப்பந்தம் செய்வது பற்றி கருத்துப் பரிமாறப்பட்டு வருகிறது என்றும் ஒஸ்டின் பெர் னாண்டோ குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் ஒஸ்டின் பெர்னாண்டோவுக்கு துணைவந்து அமெ ரிக்க அரசின் கருத்தும் அதுதான் என்று ஆம் ஓதி யிருக்கிறது.

அமெரிக்கத் தூதுவராலய அதிகாரி ஸ்டீவன் கொல்கேட் வெளியிட்ட கருத்தின் சாரம் இதுதான்.

அமெரிக்கப் போர் விமானங்களுக்கும் போர்க் கப்பல்களுக்கும் எண்ணெய் நிரப்பவும் திருத்த வேலைகளை மேற்கொள்ளவும் இலங்கை அரசுடன் ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளப்பட இருக்கிறது.

எண்ணெய் நிரப்புதல், செப்பனிடுதல் மற்றும் திருத்த வேலைகளுக்கு ஒவ்வொரு நாட்டு விமானங் களும் வேறு நாடுகளுக்குச் செல்வது வழக்கம். இந்தச் சேவைகளுக்காக சேவை உடன்படிக்கை செய்துகொள்ளப்படுகிறது. அந்த வகையில்தான் இலங்கையுடன் அமெரிக்கா சேவை ஒப்பந்தம் செய்துகொள்ள இருக்கிறது.

மற்றபடி திருகோணமலையிலோ இலங்கையின் வேறு எந்தப் பகுதியிலோ இராணுவத் தளம் அமைக கும் எண்ணம் அமெரிக்காவுக்கு இல்லை. இப்படி அவர் தெரிவித்திருக்கிறார்.

எந்த வகையிலேனும் அமெரிக்கா இலங்கைக் குள் நுழைகிறது என்றால் எல்லோரும் அதுபற்றி சந்தேகப்படுவார்கள் என்பதை நன்றாகத் தெரிந்து கொண்டதாலேயே அமெரிக்கத் தூதரக அதிகாரி எதுவித முகாந்திரமுமின்றி இலங்கையில் எந்த இடத திலும் இராணுவமுகாமை அமைக்கும் எண்ணம் அமெரிக்காவுக்கு இல்லை என்று விழுந்தடித்துக் கூறியிருக்கிறார்.

கூடாரத்தினுள் நுழைய ஒட்டகத்துக்கு இடம் கொடுத்தால் எப்படியிருக்கும்? தலையை நுழைப்ப தோடு அது நின்று விடாது. முழுமையாக உள்ளே புகுந்துவிடும். உள்ளே இருந்தவர்கள் வேறு வழி யின்றி வெளியே வரவேண்டியிருக்கும். அமெரிக்கா உலகின் மிகப்பெரிய ஒட்டகம்.

இலங்கை அரசுத் தலைவர்களின் தற்போதைய பேச்சும் போக்கும் பாதுகாப்புப் படையினர் நடந்து கொள்ளும் விதமும் புரிந்துணர்வு உடன்படிக்கை சரிவர நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதும் தமிழ் மக்களுக்கு சந்தேகத்தை அளிக்கின்றன. அதாவது அரசின் சமாதான இலக்கு திசைமாறிச் செல்கிறது; போரின் பக்கமாகத் திரும்புகிறது என் பதுதான் அந்தச் சந்தேகம்.

அதை வலுப்படுத்தும் விதத்தில் பல காரியங் கள் நடக்கின்றன. பிரதமரின் வெளிநாட்டு விஜயங் கள் கூடச் சந்தேகக் கண்கொண்டே நோக்கப்படு கின்றன. இந்த நிலையில் திருகோணமலை எண் ணெய்க் குதங்களின் ஒருதொகுதி இந்தியாவுக்கு வழங்கப்படுகிறது. அமெரிக்கப் போர் விமானங்கள், போர்க்கப்பல்கள் ஆகியவற்றுக்கு இங்கே எண் ணெய் நிரப்ப என்று ஒப்பந்தம் செய்யப்படுகிறது.

இவையெல்லாம் எங்கே போய் முடியப்போகின் றன என்பதை எண்ணி தமிழ் மக்கள் வேதனையும் விசனமும் அடைகின்றனர்.

# அதிபர், ஆசிரியர் சம்பளத்தை அதிகரிக்குமாறு ஆலோசனை

திஸா தெய்வேந்திரா சம்பள மீளாய்வு ஆணைக்குழுவின் அறிக்கையில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு சம்பளங் களை அதிகரிக்க ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்து டன் அதிபர் சேவையில் "விசேட தரம்" என புதிய சேவைத் தரத்தை உருவாக்கவும் ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

அதிபர் சேவைத் தரங்களுக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ள சம்பள விவரம் வருமாறு:-

விசேட தரம்: ஆரம்பச் சம்பளம் மாதம் 25,680 ரூபா உச் சச் சம்பளம் மாதம் 32,250ரூபா (தற்போது நடைமுறையில் உள்ள அதிபர் தரங்களுக்கு மேலாக புதிதாக சிபார்சு செய் யப்பட்டுள்ளது)

தரம் I: ஆரம்பச் சம்பளம் மாதம் 15,650 ரூபா உச்சச் சம்பளம் மாதம் 24,080 ரூபா.

தரம் 2:I:- ஆரம்பச் சம்பளம் மாதம் 14,890 ரூபா. உச் சச் சம்பளம் மாதம் 22,490 ரூபா.

தரம் 2:II:- ஆரம்பச் சம்பளம் மாதம் 12,220 ரூபா. உச் சச் சம்பளம் மாதம் 14,970 ரூபா.

தரம் 3:- ஆரம்பச் சம்பளம் மாதம் 9,640 ரூபா. உச்சச் சம்பளம் மாதம் 13,900 ரூபா.

ஆசிரியர் சேவைத் தரங்களுக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ள சம்பள விவரம் வருமாறு:

தரம் I:- ஆரம்பச் சம்பளம் மாதம் 14,890 ரூபா. உச்சச் சம்பளம் மாதம் 22,490 ரூபா.

தரம் 2:I:- ஆரம்பச் சம்பளம் மாதம் 12,220 ரூபா. உச்சச் சம்பளம் மாதம் 14,970 ரூபா.

தரம் 2:II:- ஆரம்பச் சம்பளம் மாதம் 9,640 ரூபா. உச்சச் சம்பளம் மாதம் 13,900 ரூபா.

தரம் 3:I:- ஆரம்பச் சம்பளம் மாதம் 8,090ரூபா. உச்சச் சம்பளம் மாதம் 10,810ரூபா.

தரம் 3:II:- ஆரம்பச் சம்பளம் மாதம் 7,180ரூபா. உச்சச் சம்பளம் 10,105ரூபா.

அதிபர் சேவை, ஆசிரியர் சேவைத் தரங்களுக்கு அதி கரித்த புதிய சம்பளம் சிபார்சு செய்யப்பட்டிருப்பதால், சேவை நீடிப்பு தொடர்ந்து பெறாமல் ஓய்வுபெற விரும்பிய அதிபர், ஆசிரியர்களை புதிய சம்பளத் திட்டம் நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்த்து சேவையில் தொடர்ந்து இருப்பதற்கு விரும்புவதாகக் கூறப்படுகிறது. (ஒ-11)

# வடமராட்சிக் கடற்பகுதியில் படகுகளுக்கு மீண்டும் 'பாஸ்'

வடமராட்சிக் கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களின் படகுகளுக்கு 'பாஸ்' வழங்கும் திட்டம் மீண்டும் படையினரால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக வடமராட்சி கடற்றொழிலா ளர் சங்கங்களின் சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு முன் னர் கடலில் மீன்பிடிப்பதற்கு அப்பகுதிக்குப் பொறுப்பான படை முகாம்களில் 'பாஸ்' பெறவேண்டுமென விதிக்கப்பட்டிருந்த உத்தரவு படையினரால் சமீபகாலமாகத் தளர்த்தப்பட்டிருந்தது.

ஆனால், நேற்றுமுன்தினம்முதல் மீன்பிடிக்கச் செல்லும் பட குகள் 'பாஸ்' பெற்றே கடலுக்குச் செல்லவேண்டும்மெனப் படை யினர் அறிவித்துள்ளதாக சமாச வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-117)

# சேதமுற்ற தீர்த்தக்கேணிகளின் விவரம் திரட்டுகிறது இந்து கலாசார அமைச்சு

வலி.வடக்கு,மே30

யாழ்.மாவட்டத்தில் கடந்த காலங்களில் சேதமடைந்துள்ள இந்து ஆலயங்களின் தீர்த்தக்கேணிகள் சம்பந்தமான விவரங் கள் இந்துசமய கலாசார அமைச்சினால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக கலாசார உத்தியோகத் தர்கள் மூலம் கிராம அலுவலர்கள் இந்த விவரங்களைச் சேக ரித்து வருகின்றார்கள்.

தீர்த்தக்கேணி புனருத்தாரனம் செய்யவேண்டிய ஆலயங் களின நிர்வாகிகள் பிரதேச செயலாளர் பிரிவு கலாசார உத்தி யோகத்தர்களுடன் தொடர்புகொண்டு விவரங்களைக் கைய ளிக்கும்படி வேண்டப்படுகின்றனர். (க-86)

## நாட்டு நடப்பு

### எம் நிலைதான் என்ன?

அம்மையோ தன் இட்டம் போல
ஆள எண்ணுகிறார் இந்த நாட்டை
செம்மையாய் சிறுபான்மையைக் காப்பேனென்று
செப்புறார் பிரதம மந்திரியார்
நம்மையார் ஆளுகின்றார் என்று
நாமின்னும் அறியமாட்டோம்
செம்மையாய் அப்பம் தனை இரண்டு
செம்மந்தி பங்குபோட்டாப் போல
தம்மிடை சண்டை போட்டவாறு
தனிவழி இவர்கள் சென்றால்
எம் நிலை என்ன வாகுமென்று
இறைவனே!" நீயே! செப்பு!

- விகடகவி

# விசேட அடையாள அட்டை பெற பொலீஸாரிடம் போக வேண்டுமா?

## வலி. மேற்கு மக்கள் விசனம்

வலி.மேற்கு,மே30

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் கிராம உத்தியோகத்தர் கள்மூலம் விசேட அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பிப்போர அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்கு மானிப்பாயி லுள்ள பொலீஸ் நிலையத்திற்குச் செல்லவேண்டியுள்ளது. இது குறித்துப் பொதுமக்கள் விசனமடைந்துள்ளனர்.

விசேட அடையாள அட்டைகளுக்கு கிராம உத்தியோகத் தர்களின்மூலம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்போர் தத்தமது பகுதிகளிலுள்ள இராணுவ சிவில் அலுவலகங்களுக்குச் சென்று அங்கு சிங்கள மொழியிலுள்ள படிவம் ஒன்றைப் பூரணப்படுத்திக கொடுக்கவேண்டும். அதன் பின்னர் அந்த விண்ணப்பங்கள் இரா ணுவ உயர் அதிகாரிக்கு அனுப்பப்பட்டு அவரது சிபார்சுடன் யாழ்.செயலகத்தால் விசேட அடையாள அட்டைகள் விநியோ கிக்கப்படுகின்றன. விசேட அடையாள அட்டைகள் கிராம உத் தியோகத்தர்கள்மூலமே விண்ணப்பதாரிகளுக்கு முன்னர் விநி யோகிக்கப்பட்டன. தற்போது சமாதான நிலைமை ஏற்பட்ட பினனர் மானிப்பாயிலுள்ள பொலீஸ் நிலையத்துக்குச் சென்று விண்ணப்பதாரிகள் விசேட அடையாள அட்டைகளைப் பெற வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. (ஒ-175)

# நீர்வேலி இந்து மயானம் மீண்டும் பாவனைக்கு!

அரியாலை,மே30

கடந்த ஏழு வருடங்களின் பின்னர் நீர்வேலி தெற்கு இந்து மயானம் பாவனைக்கெனத் திறந்துவிடப்பட்டுள்ளது.

இந்த மயானத்தற்குச் செல்லும் மதவடி வில்லு என்ற பாதை யில் புதைக்கப்பட்டிருந்த மிதிவெடிகள் மற்றும் காவலரண்கள் என்பன இராணுவத்தினரால் அகற்றப்பட்டு பாதை திறக்கப்பட் டதை அடுத்து சடலங்களைத் தகனம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேசமயம், இந்த மயானத்திற்குச் செல்லும் பாதை திறக் கப்பட்டதை அடுத்து இப்பகுதி இளைஞர்கள் ஒன்று சேர்ந்து சிரமதானம்மூலம் பாதையைத் துப்புரவு செய்தனர்.

இந்த மயானம் கடந்த ஏழு வருடங்களாக மூடப்பட்டு இருந்த வேளையில், நீர்வேலி தெற்குப் பகுதியில் உள்ள பனந்தோட்டக் காணியிலேயே சடலங்கள் தகனஞ்செய்யப் பட்டு வந்தன என்பது குறிப் பிடத்தக்கது. (க-17)

# பொன்னாலையில் மீளக்குடியமர நடவடிக்கை எடுக்கவேண்டும்!

## கண்காணிப்புக் குழுவிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே30

பொன்னாலைப் பகுதியில் தங்கியுள்ள கடற்படையினரை வெளியேற்றிவிட்டு, அப்பகுதியில் மக்கள் மீளக்குடியமர ஆவன செய்யவேண்டும்.

- இவ்வாறு கண்காணிப்புக் குழுவிடம் பொன்னாலையிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனர்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

1995ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தால் வலிகாமம் மேற்கில் மேற்கொள்ளப்பட்ட "முன்னேறிப்பாய்தல்" இராணுவ நடவடிக்கையுடன் எமது கிராமத்தைவிட்டு இடம்பெயர்ந்த பொன னாலைக் கிருஷ்ணன் கோயி லடியில் குடியிருந்த பல நூற் றுக்கணக்கான குடும்பத்தவர் களாகிய நாம், இதுவரை எமது சொந்த இடத்தில் மீளக்குடிய மர அனுமதிக்கப்படவில்லை. காரணம் என்னவென்றால் எமது பகுதி கடற்படையினரின் கட்டுப பாட்டில் உள்ளது.

இதேசமயம், எமது பிர தேசத்தில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை என்ற அரசாங்கப் பாடசாலை இருககின்றது. பொன்னாலைப் பகுதியில் வசித்த பல நூற்றுக்கணக்கான குடும்பங்களுக்கு மீளக்குடியமர அனுமதிக்கப்படாத நிலையிலும் இப்பாடசாலை யானது பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் இப்பொழுது இயங் கிக் கொண்டிருக்கிறது. பாடசாலைக்கு எதிரே கடற்படையின் சோதனைச் சாவடி அமைந்துள்ளது. பொன்னாலை மக்களாகிய நாம், எமது அயற்கிராமங்களான மூளாய், சுழிபுரம், வட்டுக் கோட்டை போன்ற பகுதிகளில் வசித்து வருகின்றோம்.

பொருளாதாரக் கஷ்டங்களின் மத்தியில் இருக்கின்ற எமது பிள்ளைகள், நீண்டதூரத்தில் உள்ள எமது பாடசாலைக்கு நடந்து சென்றே கல்வி கற்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் கிழமையில் இரண்டு, மூன்று தினங் கள் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லாமல்விடக்கூடிய சந் தர்ப்பமும் ஏற்படுகின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் படையினர் பாடசாலை கள் மற்றும் ஆலயங்களிலும் ஆலயத்திற்குச் சொந்தமான கட்டடங்களிலும் இருந்து வெளியேறவேண்டும். ஆனால், இங்கே கடற்படை வெளியேறாமை புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயலாகும்.

எனவே, குறிப்பிட்ட பாடசாலை மற்றும் ஆலயப் பிரதேசத் தில் நிலைகொண்டுள்ள கடற்படையினரை அகற்றி அங்கு மக்கள் குடியமர கண்காணிப்புக் குழுவினராகிய நீங்கள் ஆவன செய்யவேண்டும்.

-இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## நாளை

வைகாசி 17
வெள்ளிக்கிழமை
(31.05.2002)
திதி : பஞ்சமி
பிற்பகல் 4.15 வரை.
நட்சத்திரம் : திருவோணம்
முழுவதும்
கரிநாள்
சுபநேரம் : 5.52 - 7.22
ராகுகாலம்: 10.22 - 11.52
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

மற்றவர்களைக் குற்றஞ் சாட்டுவதால் மட்டும் ஒருவன் சுற்றவாளி ஆகிவிட முடியாது.

## BATA REQUIRES SALES REPRESENTATIVES

BATA Dealer Service Centre in Jaffna requires Sales/Marketing Representatives to market their products in Jaffna Peninsula. Two years experience in sales and marketing. Age between 22 to 35 years. Qualification in marketing will be an added advantage.

*Apply immediately to:*

BATA Dealer Service Centre,
**Advt.No.1526,**
**C/o Uthayan, Jaffna.**

(C/22309)


## அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் அடுத்தமாதம் 7ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். இக்கூட்டத்துக்கு சம்பந்தப்பட்ட அதிபர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படியும் அவர் கேட்டுள்ளார். கல்வி வலய நாள்காட்டியில் இக்கூட்டம் ஜூன் 5ஆம் திகதி இடம்பெறுவதாகக் குறிக்கப்பட்டிருந்தது. (ஔ)


## தமிழ் விழா - 2002

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் தனிநாயகம் தமிழ் மன்றத்தினால் நடத்தப்படும் தமிழ் விழா

சிறப்பு நிகழ்ச்சி : குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'நீ செய்த நாடகமே!'

காலம்: இன்று (30.05.2002) வியாழன் மாலை 6.00 மணி

இடம்: திறந்த வெளியரங்கு
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி. - தனிநாயகம் தமிழ்மன்றம்.

(4288)


## 45ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 1985 - 02 - 11

மறைவு 2002 - 04 - 16

## சிவஞானம் தேவரூபி

(தரம் 11 மாணவி - யாழ்ற்ரன் கல்லூரி)

எங்கள் அன்புள்ள ரூபியே!
புன்சிரிப்பு என்னும் அருமருந்தால்
அனைவரையும் அரவணைத்த அன்புருவே!
பாதியில் போனதோ உன் வாழ்வு?
தவியாய்த் தவிக்கின்றோம் - நாம்
ஆண்டாண்டு சென்றாலும் திருமோ?
எம் துயரம் மாறுமோ?
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*உங்கள் பிரிவால் துயருறும்:*
அப்பா, அம்மா, அக்கா, தம்பி,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

புதனடைப்பு, காரைநகர். (4130)


உம் நூற்றாண்டிற்கான ஜப்பானின் தலைசிறந்த தயாரிப்பில் உருவான -

# 15% + எரிபொருள் சேமிப்புக்கும் இயந்திரத்தில் புகை வெளியேறுவதையும் தடுக்க




புதிய என்சயின் -20 மூலம் தயாரிக்கப்பட்ட

# E-OIL
## ADVANCE

உயர் தரத்திலான ஈ-ஒயில் ஒருதுளி எரிபொருள் தாங்கியில் எரிபொருள் நிரப்பும் முன்னர் இடவும். டீசல், பெற்றோல் மற்றும் மண்ணெண்ணையுடன் சேர்பதன் (எரிபொருள் 100 லீட்டருக்கு ஈ-ஒயில் 100 மில்லி லீட்டர்) மூலம் இன்ஜின்களுக்கு கூடிய சக்தியினைப் பெற்றுக்கொள்ளலாம். புகை வெளியேறுதலையும் தடுக்கலாம். இதனை வீட்டுப்பாவனை குக்கர், விளக்குகளுக்கும் மண்ணெண்ணையுடன் சேர்த்தும் பாவிக்கலாம்.

**பண விரயத்தையும், என்ஜினுக்கு கூடிய சக்தியினையும், சூழலையும் பாதுகாப்போம்.**

விலை 120/= (100 மி.லீட்)

இறக்குமதி செய்து விநியோகிப்போர்
**M.N. International (Pvt) Ltd.**
381 1/1, இரண்டாம் மாடி, டி.எஸ். ஜயசிங்க கட்டடம், கண்டி வீதி, களனி.
தொலைபேசி: 074 813353, 074 813363, 915959 தொலைநகல்: 915959.
மின் அஞ்சல்: mninter@dynanet.lk
1995லிருந்து இலங்கையரது அபிமானத்தைவென்ற சிறந்த தயாரிப்பு

யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவுகளில் விநியோகத்தர்கள் தேவை


# ஈரவிழிகளுடன் ஓராண்டு



**மலர்வு** 25-10-1985

**உதிர்வு** 10-06-2001

## அமரர் ஸ்ரீநிதி கபில்

**(ஆண்டு 11 - மாணவன், வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்)**

**திதி: 30.05.2002**

***ஓராண்டு சென்றிடினும் ஓயாத நினைவலைகள்!***

முதல்வன் நீ என்று இங்கே
முகம் மலர்ந்து நாம் இருக்க
முன்னவனே எமை விட்டு நீ
முன்சென்ற மாயம் ஏனோ சொல்?

கபில் உன் அன்னை இங்கு
கண்ணீர் சிந்திக் கலங்கி நிற்க
கடல் அன்னை தனைத் தேடிக்
கண் காணாது சென்றனையோ நீ?

அண்ணா அண்ணா என்றே இங்கு
அன்புச் சோதரர் அரற்றி நிற்க
அழைப்பெது கேட்டு அங்கு சென்றாய்?
அன்பனே எமக்குச் சொல்லி விடு!

தந்தை உனைக் காண என்று
தவித்ததை நீ இங்கு அறியாயோ?
தண்ணீருள் மூழ்கி நீ இப்போ
தத்தளிக்க வைத்தாய் எம் நெஞ்சை!

ஆரிடம் சொல்லிடுவோம் எம் நிலையை
ஆறுதற்குத் தேடிடுவோம் யார் துணையை?
ஆண்டொன்று சென்றதையா நீ சென்று
ஆனாலும் ஓவியமாய் மனதில் இன்று!

*உனது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

*- உன் பிரிவால் துயருறும்:*
ஐ.மகேந்திரம் குடும்பம்

ஊரெழு கிழக்கு,
ஊரெழு.

(4286)

# யாழ்.ஆஸ்பத்திரி 'வார்ட்டு'களில் நோயாளர் நிரம்பி வழிகின்றனர்

யாழ்ப்பாணம்,மே30

யாழ்.போதனா வைத்தியசாலையின் "வார்ட்டு"களில் தங்கி நின்று சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ளது. இதனால் வைத்தியசாலை வார்ட்டுகளில் கட்டில்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

கடந்த திங்களன்று உள்ளக நோயாளர்களாக 190 பேர் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இவர்களில் 82 பேர் 24ஆம் வாட்டுக்கு அனுமதிக்கப்பட்டனர். ஆனால் அந்த வாட்டில் 40 கட்டில்கள் மட்டுமே உள்ளன. மேலதிகமாக அனுமதிக்கப்பட்ட 42பேர் பாய்கள் வழங்கப்பட்டு கட்டில்களின் கீழ்ப் பகுதியிலும், விறாந்தையிலும் படுக்கவைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறே நேற்றுமுன்தினமும் உள்ளக நோயாளர்களாக 206 பேர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-6)

# அமைச்சர் திஸாநாயக்காவின் வாக்குமூலம் செவ்வாய் பதிவு

கொழும்பு,மே30

விவசாய, கால்நடை வள அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு முன் வாக்குமூலமளித்தார்.

நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணியளவில் அவரது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த பொதுத் தேர்தலின்போது சொத்துக்கள் தொடர்பாக திஸாநாயககாவுக்கு எதிராக லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பாகவே அவரது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. (க)

# பேசாலை அகதிகளுக்கு மார்ச் முதல் உலர் உணவு நிவாரணம் இல்லை!

கொழும்பு,மே30

யுத்தத்தின் காரணமாக கடந்த 12வருடங்களுக்கு கூடுதலான காலம் மன்னார், பேசாலை அகதிமுகாமில் வாழும் 764குடும்பங்களைச் சேர்ந்த 1,800 அங்கத்தவர்களுக்கு கடந்த மார்ச் மாதம் முதல் உலர் உணவு நிவாரணம் வழங்கப்படவில்லை.

அரசாங்கத்தின் நிவாரணத் திட்டத்தின் கீழ் ஒரு குடும்பத்திற்கு மாதாந்தம் 1,200ரூபா உலருணவு நிவாரணமாக வழங்கப்படுகின்றது. ஆனால் மார்ச் மாதம் முதல் பேசாலை அகதிகளுக்கு இப்பணம் வழங்கப்படவில்லை என்று அகதிகள் தெரிவித்தனர் என்று சௌமிய இளைஞர் நிதியத் தலைவர் பி.அந்தோனிமுத்து கூறுகிறார்.

இதனால் இம்மக்கள் கூலி வேலை செய்து குறைந்த வருமானத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

இதற்கிடையில், சௌமிய இளைஞர் நிதியம் நாட்டின் அமைதி, சமாதானத்துக்காக கடந்த ஜனவரி மாதம் முதல் நடத்திவரும் மௌன விரதம், சமய நிகழ்வுகள் கடந்த 26ஆம், 27ஆம் திகதிகளில் மடுத் திருத்தலத்தில் நடத்தப்பட்டன. (ஐ)

## முதலாம் வருட நினைவலைகள்

மலர்வு 07 - 11 - 1937



உதிர்வு 10 - 06 - 2001

**கணபதிப்பிள்ளை இராசையா** B.Com.

(ஓய்வுபெற்ற புள்ளிவிவரவியல் அதிகாரி)

திதி: சதுர்த்தி 30.05.2002

அன்பின் பிறப்பிடமே!
அறத்தின் ஊற்றே!
உத்தமரான எம் தலைவரே!
ஓராண்டு சென்றாலும்
உம் நினைவுகள் எம்மனதை
விட்டு என்றும் அகலாது!

*உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*"சிவகாமி அம்மன் கோயிலடி, இணுவில் கிழக்கு.* (4242)

- மனைவி, மகன், மைத்துனர்கள்.

# மத்தியஸ்தர் பரீட்சையில் தோற்றியோருக்கு!

வலி.வடக்கு,மே30

தேசிய வலைப்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்ட மத்தியஸ்தர்களுக்கான பரட்சையில் தோற்றி பெறுபேற்று அட்டையைப் பெற்றவர்கள் அவற்றை உடனே மாவட்ட விளையாட்டு அதிகாரியிடம் கையளிக்கும்படி வேண்டப்பட்டுள்ளனர்.

மத்தியஸ்தர் பரீட்சைக்கு தோற்றி சித்தி அடைந்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதால், இந்த அட்டையை கையளிக்கும்படி கேட்கப்படுகின்றது. (ஒ-86)

# தமிழ் விழா

யாழ்ப்பாணம்,மே30

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் தனிநாயகம் தமிழ் மன்றத்தினால் நடத்தப்படும் தமிழ் விழா, கல்லூரியின் திறந்த வெளியரங்கில் இன்று மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் இந்த விழாவில் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'நீ செய்த நாடகமே' இடம்பெறவுள்ளது. (ஒ-13-ரி)

# பன்றிக்கு வைத்த பொறிவெடியில் இளைஞர் காயம்

பளைப் பகுதியில் பன்றிக்கு இலக்குவைத்து வைக்கப்பட்டிருந்த பொறிவெடி ஒன்றில் சிக்கிய இளைஞா ஒருவா வலதுகாலில் காயமடைநதாா.

வரணி கரம்பைக்குறிச்சியைச் சேர்ந்த அற்புதராசா சுதாகரன் (வயது-19) என்ற இளைஞரே கடந்த புதன் கிழமை பொறிவெடியில் சிக்கி படுகாயமடைந்தார்.

வன்னியில் இருந்து வந்து மீளக் குடியமர்ந்த தனது தாயாரைப் பார்க்கச் சென்ற இளைஞரே பொறிவெடியில் சிக்கிக் காயமடைந்தார்.

அக்கராயன்குளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர், மேலதிக சிகிச்சைகளுக்காக நேற்று அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துவரப்பட்டுள்ளார்.

இவருடன் மேலும் இருவர் வன்னியில் இருந்து மேலதிக சிகிச்சைகளுககாக் யாழ் போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனா. (ஐ-6)

# இலங்கையில் அமெரிக்காவுக்கு தளம் அமைக்கும் எண்ணம் இல்லையாம்

இலங்கையின் திருகோணமலைத் துறைமுகப் பகுதியிலோ அல்லது வேறு இடத்திலோ இராணுவத் தளம் ஒன்றை அமைக்கும் திட்டம் அமெரிக்காவுக்கு இல்லை.

இவ்வாறு கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரக அதிகாரியான ஸ்டீவன் கொல்கேட் தெரிவித்தார்.

இலங்கை அரசுடன் அமெரிக்கா மேறகொள்ளவுள்ள ஒப்பந்தம் அங்கு அமெரிக்கப் படைத்தளம் ஒன்றை அமைக்க வகை செய்யும் என்று எழுந்துள்ள சர்ச்சை குறித்து அவர் விளக்கமளிக்கையில் மேலும் கூறியதாவது:-

எரிபொருளை நிரப்புவதற்காக அல்லது சிறு திருத்த வேலைகளுக்காக எந்தவொரு நாட்டின் விமானங்களும் கப்பல்களும் மற்றுமொரு நாட்டுக்கு செல்ல முடியும்.

உடன்படிக்கை ஒன்றைக் கைச்சாத்திடும்போது அதன் மூலம் வரையறுக்கப்படும் நெருக்கமும், ஒத்துழைப்பும் ஏற்படும்.

இதன் அர்த்தம் எல்லையற்ற ரீதியில் அனைத்தையும் அள்ளிக் கொடுப்பதாக அமைந்து விடப்போவதில்லை என்றார் அவர். (க-6)

# சாவகச்சேரியில் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,மே30

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் அனுசரணையுடன் சங்கத்தின் சாவகச்சேரிப் பிரிவு நடத்தும் இலவச மருத்துவ முகாம் இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு கச்சாய் அம்மன் கோயில் முன்பாகவுள்ள சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

கொழும்பில் இருந்து வருகை தந்துள்ள வைத்திய நிபுணர்கள் கலந்து கொள்ளவுள்ள இந்த மருத்துவ முகாமில் அனைத்து மக்களும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அழைக்கப் பட்டுள்ளது.

இதில் நீரிழிவு, இரத்த அழுத்தம், புற்றுநோய் மற்றும் பொது நோய்களுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ஒ-10)

# சந்தைகளில் எல்லா வகையான இறைச்சியும்

குருநகர்,மே30

தரைவழிப் போக்குவரத்து ஆரம்பமாகியதைத் தொடர்ந்து எல்லா வகையான இறைச்சிகளும் தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள சந்தைகளில் வாங்கக் கூடியதாக உள்ளது.

காட்டுப்பன்றி இறைச்சி, மான், மரை, உடும்பு போன்றவற்றை குறைந்த விலையில் சந்தைகளில் பெறமுடிகிறது.

வன்னியில் இருந்து இந்த இறைச்சி வகைகள் எடுத்துவரப்படுகின்றன. (க-51)

# தலவாக்கலை நகரில் கடைகள் எரிந்து நாசம்!

கொழும்பு,மே30

தலவாக்கலை நகரில் ஐந்து கடைகள் தீப்பற்றி எரிந்தன. இவற்றில் மூன்று கடைகள் தமிழருக்குச் சொந்தமானவை.

திங்கட்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் இக்கடைகள் திடீரென தீப்பற்றிக் கொண்டன என்று கூறப்படுகிறது. தீப்பற்றிக் கொண்டதற்கான காரணம் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. தலவாக்கலைப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தலவாக்கலை பஸ் நிலையத்திற்கு அருகில் நுவரெலியா வீதியில் இந்தக் கடைகள் அமைந்திருந்தன.

தமிழர்களின் கடைகளில் ஒன்று பிந்துனுவெவ சம்பவத்தின்போது பெரும்பான்மை இனத்தவர்களால் தாக்கப்பட்டு பின்னர் திருத்தி அமைக்கப்பட்டதாகும். தீயினால் ஏற்பட்ட சேதங்கள் பல லட்சம் ரூபா என்று பாதிக்கப்பட்டவர்கள் கூறினர்.

இத்தீவிபத்தை அடுத்து மலையக மக்கள் முன்னணித் தலைவரும், சமூக அபிவிருத்தி அமைச்சருமான பெ.சந்திரசேகரன் அங்கு சென்று பார்வையிட்டார். இக்கடைகளை நடத்தியவர்கள அவ்விடத்தில் தொடர்ந்து வியாபாரம் செய்யவும் அவர்களுக்குத் தேவையான நிவாரண உதவிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கும்படி மாவட்ட அரசாங்க அதிபருக்கு அமைச்சர் உத்தரவிட்டார். (ஐ)


இசைக்கருவிகள்



சகலவிதமான இசைக்கருவிகளையும், அவற்றின் உதிரிப்பாகங்களையும், மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும், அவற்றை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்.

சாயி சங்கீதா (Sai Sangeetha)
UG. 53, People's Park, Gaswork Street, Colombo 11.
Tel : 384222, 445102 Fax : 94-1-445102
E-mail : saimusic@sltnet.lk
TALENT ads









• 60 சீசீ 2 ஸ்ட்ரோக் என்ஜின்.
• கிக் மற்றும் ஸ்செல்வ் ஸ்டாட்டர்.




• 125 சீசீ 2 ஸ்ட்ரோக் என்ஜின்.
• ஸ்செல்வ் ஸ்டாட்டர்.




• 74 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சவாரி நிலைமைகளில் லீட்டருக்கு 87 கி.மீ




• 100 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 87 கி.மீ.




• 111.6 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 60 கி.மீ.




• 110 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 60 கி.மீ

**டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியிடமிருந்து** ஒரு பஜாஜ் மோட்டார் சைக்கிளை நீங்கள் வாங்குவீர்களானால் நீங்கள் நாடும் தரச்சிறப்பு, அபாரமான செயற்பாடு, நம்பகத்தன்மை அனைத்தும் நிறைவேறுகின்றது. நீங்கள் தனிப்பட்ட அல்லது குடும்ப வாழ்க்கைப் பாவனைக்கு கச்சிதமாக அமையும் பலதரப்பட்ட, நிகரில்லாத, உறுதிமிக்க, பன்முகப் பாவனைக்குரிய பஜாஜ் மோட்டார் சைக்கிள்கள் வகை வகையாக எம்மிடம் உண்டு.

நீங்கள் நாடுவது வேகமா, சிக்கனமா, அல்லது தன்னிகரில்லா தனிச்சிறப்பா? அது எது வேண்டுமானாலும் DPMC வழங்கும் வகையறாக்களில் நீங்கள் பூரண நம்பிக்கை வைக்கலாம். அத்துடன் கீழ் காணப்படும் வியாபாரிகளிடம் நீங்கள் எமது அனைத்துவகை பஜாஜ் மோட்டார் சைக்கள்களையும் பெற்றுக்கொளலாம்.

**பஜாஜ்** பல்லாண்டுகாலம் பணத்திற்கேற்ற பெறுமதி.

DPMC

# டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்.

75, வைட் பார்க் கோர்னர், கொழும்பு - 2. தொலைபேசி : 074-700600 பெக்ஸ் : 687175 ஹொட்லைன் : 074-715050

**விசாரணைகள்** எஸ். யாசோதரன், எ-16, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021-2798
எம்.பி.சி.எஸ் யாழ்ப்பாணம், இல.127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021-2587
குறிஞ்சி டிரேடர்ஸ், இல. 6, 1ம் மாடி மொடன் மாக்கட் கண்டி வீதி, சாவகச்சேரி. தொலைபேசி : 021-2221

(C-21934)

Mel Ads

# எமக்கு உரிமைகளைத் தாருங்கள்! இல்லையேல் போரிட்டுப் பெறுவோம்!!

## புலிகளின் இந்த நிலைப்பாடு நியாயமானதே என்கிறார் விக்கிரமபாகு கருணாரத்ன

**"சமாதானம்" என்பது இன்று இந்நாட்டில் பலராலும் பேசப்பட்டு வரும் சொல்லாகும். எப்படியேனும் சமாதானத்தை உருவாக்கியே தீருவது என அரசு கூறுகிறது. சமாதானமா? நாம் அதற்கு விடமாட்டோம் என மற்றொரு குழுவினர் வீதியில் இறங்கவுள்ளனர். தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் குறித்து புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன "லங்காதீப" பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

*கேள்வி:* சமாதானம் தொடர்பாக சிறிலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு கண்டுள்ள நிலையில் அரசின் நடவடிக்கைகளை என்ன அடிப்படையில் சிறப்பானவை எனக் கருதுகிறீர்கள்?

*பதில்:* இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளின்போது நாங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கை விடுதலைப் புலிகளுக்கு ஏற்படவில்லை. நம்பிக்கை உருவாகும் விதத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத காரணத்தால் முன்னர் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் அவநம்பிக்கையே நிலவியது. ஆனால், இம்முறை பிரதமர் ரணில் அரசமைப்புக்கான திருத்தத்தின் மூலம் நிரந்தர தீர்வினைக் காணும் நோக்கில் இடைக்கால நிர்வாகப் பொறுப்பை வழங்குவார் என்ற நம்பிக்கையில் விடுதலைப் புலிகள் பேச்சுக்கு விருப்பும் தெரிவித்துள்ளனர்.

*கேள்வி:* இருப்பினும் ஜனாதிபதி சந்திரிகா, இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் பத்து ஆண்டுகளுக்கு வழங்கவேண்டும் எனத் தெரிவித்திருந்தார். பொது.ஐ.முன்னணி நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த புதிய அரசமைப்புத் திட்டத்திலும் கூட 5 ஆண்டுகளுக்கு இடைக்கால நிர்வாகம் பற்றிக் கூறப்பட்டுள்ளது- இல்லையா? அவற்றை எல்லாம் நிராகரித்த விடுதலைப் புலிகள், பிரதமர் ரணில் அளிக்கும் இடைக்கால நிர்வாகத்தை நேர்மையுடன் ஏற்றுக் கொள்வார்களா?

### பொய்யான சமாதான முயற்சிகள்

*பதில்:* சந்திரிகாவிடம் பல்வேறு திட்டங்கள் இருந்தன. அவர் அந்தத் திட்டங்களுடன் விளையாடினாரே தவிர விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை மேற்கொள்ள இடைக்கால நிர்வாகத்தை நடைமுறைப்படுத்த முயற்சிக்கவில்லை. அப்படிச் செய்திருந்தால் அவர் போற்றப்பட்டிருப்பார். அரசியலில் விரிவான அனுபவத்துடன், இடைக்கால நிர்வாகம் போன்ற திட்டங்களுடன் 1994இல் அரசின் பிரதிநிதிகள் செயற்பட்டிருந்தால் அன்று சுமுகமான நிலைமை ஏற்பட வாய்ப்பு இருந்தது. ஆனால் அரச பிரதிநிதிகளாக அனுப்பப்பட்டவர்கள் சந்திரிகாவின் பாடசாலை நண்பர்கள் எனக் கூறப்பட்டது. நான் அவர்களை விமர்சிப்பதாக சிலருக்கு கோபம் ஏற்படக்கூடும். ஏதோ கட்டடம் கட்டுவதற்கான திட்டத்துடன் அவர்கள் யாழ்ப்பாணம் சென்றனரே தவிர அரசியல் தீர்வுகளைக் காண்பதற்கான பொருத்தமான சூழ்நிலையை உருவாக்க அல்ல. மனித உரிமைகளுடன் மனிதர்களைப் போல வாழ்வதுதான் முதல்தேவை என யாழ்ப்பாண மக்கள் தெரிவித்தனர் என அன்று பேச்சுக்களை மேற்கொள்ள யாழ்.சென்ற அரச தரப்புப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

நானும் அதைத்தான் கூறுகின்றேன். ஆனால், யாழ்ப்பாணத்துக்குத் தேவைப்பட்டது நேர்மையான அரசியல் தலைமையும், ஆலோசனைகளுமே. எனவேதான் 1994இல் பொய்யான சமாதான முயற்சிகள் முறிவடைந்தன.

*கேள்வி:* நீங்கள் என்னதான் கூறினாலும் ஆயுதங்களின்மூலம் அரசியல் நடத்திய புலிகளுக்கு அவ்வழியைக் கைவிட்டு செயற்பட வேண்டிய தேவை உள்ளதா? அவர்கள் பற்றித் தெற்கில் அவநம்பிக்கையும் எதிர்ப்புமே நிலவுகின்றன. ஒரு சிலர் குறுகிய அரசியல் ஆதாயங்களுக்காக எதிர்க்கின்றனர். ஆனால், வேறு சிலர் நேர்மையுடன் எதிர்க்கிறார்கள் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? புலிகள் மீது உங்களுக்கு நம்பிக்கை இருக்கலாம். ஆனால், தெற்கிலுள்ள பெரும்பான்மை மக்கள் அவர்களை நம்பவில்லையே?

### புலிகளின் தலைவர்கள் நம்பிக்கைக்குரியவர்கள்

*பதில்:* புலிகள் தங்களுக்குக் கீழ்ப்படிய மாட்டார்கள் என்ற அவநம்பிக்கை காரணமாகவே பலர் அவர்களை நம்ப மறுக்கின்றனர். இதை விட வேறுபிரச்சினைகள் இல்லை. விடுதலைப் புலிகளின் தலைவர்கள் நம்பிக்கைக்கு உரியவர்கள் என்பதே எனது முடிவாகும். ஏனெனில், அவர்கள் சொல்லுவதும் செய்வதும் மிகவும் தெளிவாகவே உள்ளன.

வடக்குக் கிழக்கில் எமக்கு உரிமைகளை - அதிகாரத்தை தாருங்கள். இல்லையேல் நாங்கள் போர் புரிந்து தனியான நாட்டை உருவாக்குவோம் என்பது புலிகளின் மிகவும் தெளிவான, அப்பளுக்கற்ற கருத்தாகும். இந்தக் கருத்திற்கு அமையவே புலிகள் செயற்படுகின்றனர். எனவே, பிரிந்துபோவதைத் தடுப்பதற்கு அரசமைப்பு ஊடாக வழங்கக் கூடிய அதிஉச்ச அதிகாரங்களை வழங்கினால் என்ன? என்பதை இனங்கண்டு நிறைவேற்றுவதே அரசின் கடமையாகும்.

*கேள்வி:* தனியான நாடு என்ற அவர்களது கனவில் இருந்து புலிகள் விடுபடத் தயாராகிவிட்டனர் என்பதற்கான அறிகுறிகள் ஏதும் தற்போது உங்களுக்குத் தெரிகின்றனவா? திம்புப் பேச்சுக்களின்போது முன்வைக்கப்பட்ட தீர்மானங்களுக்கு இது முரண்பாடானதா?

*பதில்:* சுயமாகத் தீர்மானிக்கும் உரிமை, தன்னாட்சி உரிமை ஆகியனவற்றின் அடிப்படையிலேயே இதற்குத் தீர்வு காணப்படவேண்டும் என நான் எப்போதும் கூறிவருகிறேன். வடக்குக் கிழக்கு தமிழர்களின் தாயகம் என்பது குறித்து முதலில் கூறியவன் நானே. அதை நான் கைவிடவில்லை. எனவேதான்.புலிகள் போராட்டத்தில் ஈடுபட்டது ஒரு குறிக்கோளின் அடிப்படையிலேயாகும். அதைக் கைவிடவேண்டும் என யாரும் கூறினால் அது நடைபெறக்கூடிய விடயமல்ல. பிரபாகரன் இதைக் கைவிடுவார் எனில் அவர் காட்டிக்கொடுத்தவராவார். அடிப்படைக் குறிக்கோள்களைக் கைவிடுமாறு அழுத்தம் கொடுக்கலாகாது. மாறாக அந்தக் குறிக்கோள்களின் அடிப்படையில் ஐக்கியப்படும் வழிமுறைகளை அனுசரிக்க வேண்டும்.

*கேள்வி:* விடுதலைப் புலிகளின் அடிப்படைக் கோரிக்கைகள் மூன்றையும் ஒன்றுபட்ட நாட்டிற்குள் நிறைவேற்ற முடியுமா? ஒன்றுபட்ட நாட்டிற்குள் ஒரு குறித்த பிரதேசத்தில் அந்தக் கோரிக்கைகளை வழங்கினால் அப்போது ஒன்றுபட்ட நாட்டை தொடர்ந்து பேணமுடியுமா?

### நல்ல உதாரணம் இந்தியாதான்!

*பதில்:* யார் அவ்வாறு கூறுகிறார்கள். நாங்கள் இந்தியாவை எடுத்துக் கொள்ளுவோம். இந்தியா 15, 20 இனங்களுக்குச் சொந்தமான நாடாகும். அனைத்து இனங்களும் தத்தமது இன அடையாளங்களை உறுதி செய்யும் விதத்தில் நாடு அமைக்கப்பட்டுள்ளது. அவற்றில் ஒன்றுதான் தமிழ்நாடு. தெலுங்கு தேசம் என்பது தெலுங்கர்களின் நாடாகும். மேற்கு வங்கம் என்பது வங்காளிகளின் நாடாகும். இவ்வாறான நாடுகள் எல்லாம் இணைந்த பெரிய நாடுதான் இந்தியா. பல்வேறு இனங்கள் ஒன்றிணைந்து வாழமுடியும் என்பதை உறுதிசெய்யும் நாடுதான் இந்தியாவாகும்.

வரலாற்றில் ஜன்ம விரோதிகள் எனக் கருதப்பட்ட இனங்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து வாழும் நாடுதான் இந்தியாவாகும். முஸ்லிம்கள் மற்றும் இந்துக்கள், ஆரியர் மற்றும் திராவிடர்கள் ஆகியோர் முற்காலத்தில் தீவிரமான போர்களில் ஈடுபட்டனர். ஆனால், இன்று அந்நாட்டில் இணைந்து வாழ்கின்றனர். அவ்வாறே சிறிலங்காவிலும் தமிழ் மக்களின் தாயகத்தை ஏற்று தன்னாட்சி உரிமையை வழங்கி நாடு பிரிவுபடாமல் வாழ முடியும். அதன்பின்னர் "இலங்கையர்கள்" என்ற தேசியத்தைக் கட்டி வளர்க்க முடியும்.

இந்திய மக்கள் எந்த மாநிலத்தில் வாழ்ந்தாலும் தம்மை இந்தியர் என அழைப்பதில் பெருமை கொள்கின்றனர். இலங்கையர் என ஏன் அழைக்க முடியாமல் உள்ளது? இலங்கையர் என்ற எண்ணம் வலுப்பெற வேண்டுமாயின் இந்தியாவில் வழங்கப்பட்டுள்ள தன்னாட்சி அதிகாரம் இங்கும் வழங்கப்பட வேண்டும். வன்முறையால் இனங்களை ஒன்றுபடுத்த முடியாது. சுய விருப்பத்தின் பேரில் இனங்கள் ஒற்றுமைப்படுமேயானால் தேசிய அடையாளத்தைப் பேணமுடியும். அத்தகைய பின்னணியிலேயேதான் இந்தியா போன்று இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தைப் பேண முடியும். இன்று உலகில் எந்தவொரு நாட்டிற்கும் கீழ்ப்படியாத நிலையில் இந்தியா உள்ளது.

*கேள்வி:* "சமஷ்டி" அடிப்படையில் அதிகாரப் பரவலாக்கல் மேற்கொள்ளப்படவேண்டும் என நீங்கள் சிறிலங்கா அரசுக்கு சிபார்சு செய்கிறீர்களா?

### ஏற்கனவே பிரிபட்டுவிட்டது நாடு

*பதில்:* தற்போதுள்ள தேவைகள் குறித்தே நான் கருத்துத் தெரிவிக்கிறேன். தற்போது உருவாகிவரும் சூழ்நிலையைப் பயன்படுத்தி இருதரப்பினரும் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டும். யார் எதைக் கூறினாலும் தற்போது இந்நாட்டில் புலிகளால் நிர்வகிக்கப்படும் பிரதேசம் இருப்பது தெளிவாகும். அதாவது நாடு ஏற்கனவே பிரிக்கப்பட்டுவிட்டது. இந்தப் பிளவுபட்ட நாட்டை மீண்டும் ஒன்றிணைப்பதற்கான முயற்சிகளே மேற்கொள்ளப்பட வேண்டும். தமிழ் இராச்சியம் உருவாக்கப்பட்டுவிட்டது. அதன் பிரதமரும் ஜனாதிபதியும் பிரபாகரனே எனப் புலிகள் கூறுகின்றனர். அப்படி அவர்கள் கூறுவதைக் கேட்டு எமக்கு வயிற்றுவலி ஏற்பட்டால் அதற்கு ஒன்றும் செய்ய முடியாது.

கிளர்ச்சியின் மூலம் அவர்கள் தலைவனை உருவாக்கியுள்ளனர். அந்தத் தலைமைக்கும் எமக்கும் இடையே தொடர்புகளை நாம் ஏற்படுத்த வேண்டும். தற்காலிகமாக ஏற்படுத்தப்படும் அரசின் மூலம் இதை ஏற்படுத்த முடியும். அதாவது இடைக்கால நிர்வாகத்தின் மூலமாக. அந்த இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவது யார்?

அரசாங்கத்தின் தலைமையிலான நாடாளுமன்றமே அதை உருவாக்க வேண்டும். அப்போது இடைவெளி பெரிதும் குறையும். இடைக்கால நிர்வாகத்தின் ஊடாக விடுதலைப் புலிகளோ அல்லது அவர்களது பிரதிநிதிகளோ முன்வரும்போது சமாதானத்தை அரசமைப்பு ரீதியாக உருவாக்க முடியும். இவ்வேளையில் புலிகளின் மீது நம்பிக்கை வைப்பது குறித்து சிலர் சந்தேகிக்கின்றனர். ஆனால், என்னைப் பொறுத்தவரையில் அந்தச் சந்தேகம் வேறுவிதமாக இருக்கிறது.

*கேள்வி:* தங்களுக்கு அனைத்தும் வேறுவிதமாக - வித்தியாசமாகவே தோன்றுகிறதுபோல் தெரிகிறது. வித்தியாசமாக என நீங்கள் எதனைக் குறிப்பிடுகிறீர்கள்?

*பதில்:* அரசாங்கமும் சர்வதேச சமூகமும் தற்போது விடுதலைப் புலிகளை மாட்டிவிடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. "நீங்கள் திறந்த பொருளாதாரக் கொள்கையை ஏற்றுக் கொள்ளுங்கள் எனவும் உள்ளகச் சுயநிர்ணயம் என்னும் எந்தவொரு அகராதிகளிலும் இல்லாத பதங்களைப் பிரயோகித்தும் சுமைகளை ஏற்க முற்படுவர். பிரிபடாத நாட்டிற்கான அரசமைப்புக்குள் - திறந்த பொருளாதார அதிகாரசபை முறையின் கீழ் பிரபாகரன் அதிகாரத்தை ஏற்க முனைகிறார். அவ்வாறெனின் பெரிய அளவில் அதிகாரம் கிடைக்க வாய்ப்பில்லை. 13ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கு அப்பால் செல்வார்களோ என்பது குறித்துத் தெரியவில்லை.



*கேள்வி:* ஒன்றுபட்ட அரசமைப்புக்குள் - திறந்த பொருளாதார அதிகார சபையின் கீழ் - 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் அதிகாரப் பரவலாக்கல் இடம்பெறாது என நீங்கள் என்ன காரணத்திற்காக என்ன அடிப்படையில் சந்தேகம் கொள்கிறீர்கள்?

### அமெ., இந்திய நிலைப்பாடுகள்

*பதில்:* எத்தனையோ காரணங்களைக் கூறமுடியும். இந்நாட்டின் பிரச்சினையில் அமெரிக்கா நேரடியாகத் தலையிட்டுள்ளது. உலக முதலாளித்துவத்தின் பிராந்திய வல்லரசு தானே என இந்தியா கூறுகிறது. தங்களது ஆதரவுடன் தங்கள் ஊடாக அமெரிக்கா சிறிலங்காப் பிரச்சினையில் காலடி எடுத்துவைக்க வேண்டும் என இந்தியா நினைக்கிறது. தற்போது எமது நாட்டில் தற்காலிகமாக எடுக்கப்படும் முடிவுகள் யாவும் நோர்வே நாட்டவர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. அவர்கள் மீது அமெரிக்கா அழுத்தங்களைக் கொடுக்கிறது. திறந்த பொருளாதாரக் கொள்கையினை ஏற்குமாறும் தற்போதுள்ள அரசமைப்புக்குள் செயற்பட முயலுமாறும் அமெரிக்கா அழுத்தங்களைக் கொடுக்கிறது.

கொஞ்சம் கொஞ்சமாகப் பிரபாகரன் இவற்றிற்கு இணங்கப் போகிறார். இதனால் அடிமட்ட எண்ணங்களில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. தங்கள் பிரதேசங்களில் இருந்து விரட்டி அடிக்கப்பட்ட கொம்பனிக்காரர்களுக்கு மீண்டும் இடமளிப்பதா? என்பதே அவர்கள் எழுப்பும் வினாவாகும். இதனாலேயே பிரபாகரன் பத்திரிகையாளர் மாநாட்டை நடத்த நேரிட்டது.

*கேள்வி:* இருப்பினும் நீங்கள் கூறும் விடயங்களுக்கும் பிரபாகரன் கூறும் விடயங்களுக்கும் இடையே வித்தியாசங்கள் உள்ளனவே? வடக்குக் கிழக்குப் பிரதேசத்திற்கு வந்து வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிக்க எவருக்கும் இடமளிக்கப்பட மாட்டாது என்றல்லவா பிரபாகரன் அண்மையில் தெரிவித்துள்ளார்?

*பதில்:* திறந்த பொருளாதாரக் கொள்கையைப் பிரபாகரன் ஏற்றுக் கொண்டால் இவ்வாறான பேச்சுக்களை மேற்கொள்வதில் பயனேதுமில்லை. திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழ் எவருக்கும் தடை விதிக்கமுடியாது. அமெரிக்கர்கள், பிரிட்டிஷார் மற்றும் பிரெஞ்சுக்காரர்கள் வடக்கு - கிழக்கிற்கு வந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடலாம். ஆனால், காலியில் இருந்து - மாத்தறையில் இருந்து எவரும் வரக்கூடாது என்றே பிரபாகரன் கூறுகிறார். எனவே திறந்த பொருளாதாரக் கொள்கையினைப் பிரபாகரன் ஏற்றுக்கொள்வாராயின், அந்தப் பிரதேசங்களுக்கு வெளியார் வந்து வர்த்தக நடவடிக்கைளில் ஈடுபடக்கூடாது எனக் கூறுவாரா என்பது தெரியாது.

### இடைக்கால நிர்வாகத் திட்டம்

*கேள்வி:* வடக்குக் கிழக்கிற்கான உத்தேச இடைக்கால நிர்வாகத் திட்டம் குறித்து தங்களது அபிப்பிராயம் என்ன? அந்த இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகளுக்கு மட்டுமே ஒதுக்கப்படவேண்டுமா? அல்லது வடக்குக் கிழக்கில் செயற்படும் ஏனைய அரசியல் கட்சிகளுக்கும் இடமளிக்கப்படவேண்டுமா? ஆயுதமேந்தி சிங்கள மக்களுக்கு பெருமளவில் அழிவுகளை மேற்கொண்டவர்களிடம் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தைக் கையளிப்பது குறித்து இருமுறை சிந்திக்க வேண்டாமா?

*பதில்:* இடைக்கால நிர்வாகம் புதிய விடயமல்ல. 1989இல் இவ்வாறான நிர்வாகத் திட்டம் முன்வைக்கப்பட்டது. விடுதலைப் புலிகளும் ஏற்றுக்கொள்ளவிருந்தனர். அன்று எவ்வாறு திட்டமிடப்பட்டது? விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாகத்தில் பெரும்பான்மையை வழங்கி - ஏனைய பிரதிநிதிகளையும் உள்ளடக்கும் விதத்தில் அல்லவா திட்டமிடப்பட்டது. அத்துலத்முதலி விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைக் கைது செய்த தேவையற்ற நடவடிக்கை காரணமாக அன்று இடைக்கால நிர்வாகம் குழப்பத்தில் முடிந்தது.

தற்போது பிரபாகரன் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளுடன் பேச்சுகளை மேற்கொண்டுள்ளார். அனைவரின் ஒத்துழைப்புடன் புலிகளின் தலைமையில் இடைக்கால நிர்வாகத்தை மேற்கொள்வதே அவரின் எண்ணமாகும். கட்டாயமாக விடுதலைப் புலிகளுக்கு முக்கிய இடம் அளிக்கப்படவே நேரிடும்.

*கேள்வி:* படிப்படியாக விடுதலைப் புலிகள் முன்வந்து சமஷ்டி முறையிலான அரசமைப்பை ஏற்பர் எனவும் அவ்வாறான முறையில் வடக்கு - கிழக்குப் பிரதேசம் கொழும்பிலுள்ள மத்திய அரசின் பூரண கட்டுப்பாட்டில் இராமல் நூலினால் இணைக்கப்பட்ட ஓர் இணைப்பாகவே இருக்கும் எனவும் அவ்வாறான இணைப்பு காலப்போக்கில் அறுபட்டு தனியான நாடாக அமையலாம் எனவும் 'சிஹல உறுமய' கட்சி வாதிடுகிறது. அது புறந்தள்ளக்கூடிய கருத்து அல்லவே?

**தமிழில்: கஜனி**

### குழப்பியடிக்கும் கதையே இது

*பதில்:* இது எல்லோரையும் குழப்பியடிக்கும் கதையாகும். தமிழர்கள் ஆரம்பத்தில் 50க்கு 50 கேட்டனர். அதன்பின்னர் சமஷ்டி முறையைக் கோரினர். அதன்பின்னர் இணைந்த அரசு முறையைக் கோரினர். இப்படியாக ஜனநாயக ரீதியிலான தீர்வு எதுவும் கிட்டாத காரணத்தினாலேயே தமிழீழத்திற்கான ஆயுதப் போராட்டத்தில் இறங்கினர். போராட்டத்தின் மூலம் பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்களுடன்தான் நாம் தற்போது பேசவுள்ளோம்.

இருதரப்பினருக்கும் இடையில் தற்போது நூல் அளவிலேனும் இணைப்பு இல்லை. இணைந்த அரசு என்ற நூல் மூலமாகவேனும் தொடர்பினை ஏற்படுத்த அரசு முனைந்திருக்கிறது. இணைந்த அரசு என்ற தடித்த நூலைப் பயன்படுத்தி பிரபாகரனைக் கட்டிப்போட அரசு முனைகிறது. தமிழர்கள் அனைவரும் ஈழத்தை ஆதரிக்

(10ஆம் பக்கம் பார்க்க)

# சாயி சிந்தனை



## சத்யம் மட்டுமே நிலைக்கும்

உணவு தேவையற்ற, பசியற்ற எந்த மனிதப் பிறவியும் கிடையாது. அதைப் போன்றே இறைவனைக் காண வேண்டுமென்ற பசியும் உங்களுக்கு இருக்க வேண்டும். அதனைச் சிலர் பைத்தியக்காரத்தனம் என அழைக்கலாம். அது அவர்களது பைத்தியக்காரத்தனமே தவிர வேறல்ல. ஒவ்வொருவருக்கும் அவர்களது நம்பிக்கை, தீர்மானம், அனுபவம் என்பது இருக்கிறது. எவருக்கும் மற்றவரை விமர்சிக்க உரிமை கிடையாது.

இந்த உடலுக்குத்தான் பிறப்பும், இறப்புமே தவிர ஆத்மாவுக்கு அல்ல. அதற்கு முதலும் இல்லை. முடிவுமில்லை. அது எங்கும் நிறைந்தது. எல்லாவற்றிலும் நிறைந்து பரவியிருக்கும் நிரந்தரமான பிரம்மன். யார் பிரம்மன்? புத்தகங்களில் விவரித்திருப்பது போல நான்கு தலைகளுடன் காட்சியளிப்பவரல்ல.

பிரம்மா என்பது எங்கும் பரந்து விரிந்திருக்கும் தன்மை. எங்கு பார்த்தாலும் நீங்கள் பிரம்மனையே காண்கிறீர்கள். இந்த அன்பின் விரிவாக்கம்தான் கடவுள். எனது உடல் என்ற குறுகிய நோக்கு. அன்பினையும் குறுகியதாக்கும். அது இறப்புக்கும் சமன்.

ஆகவே நீங்கள் அன்பினை விரிவாக்கிக்கொள்ள வேண்டும். உங்கள் அன்பு என்பது உங்களுடைய குடும்பம், சுற்றம் இவற்றுடன் முடிந்து விடக்கூடாது.

கணிதத்தில் 1+1+1+1 என்றால் 4 வருகிறது. ஆனால் ஆன்மீகக் கணிதத்தில் ஆத்மா+ஆத்மா எனக் கூட்டும்போது வரும் விடை ஆத்மாதான். அது கூடுவதுமில்லை. குறைவதுமில்லை. ஆத்மாவின் முதல் பெயர் நான். வேதங்கள் கூறுகின்றன. 'அஹம் பிரம்மாஸ்மி' (நானே பிரம்மன்) இந்த நான் தான் இறைவனின் முதல் பெயர்.

இந்த 'நானை'ப் புரிந்து கொள்ள சத்தியத்தின் பாதையில் தொடர்ந்தால்தான் முடியும். இவ்வுலகில் சத்யம் மட்டுமே நிலைத்திருக்கிறது.


## மாபெரும் பரிசுப் போட்டி

உங்கள் அபிமான பத்திரிகையான உதயனும், குவைத் எயர் வேயிசும் இணைந்து நடத்த விருக்கும் மாபெரும் பரிசுப் போட்டியில் நீங்களும் வெற்றியாளராக வேண்டுமா? விவரங்களுக்குத் தினந்தோறும் வெளிவரும் உதயனை வாசியுங்கள்.

*முதலாவது பரிசு* - வெளிநாடு செல்வதற்கு ஒருவருக்கு இலவசப் பயணச்சீட்டு.

மற்றும் பல கவர்ச்சிகரமான ஆறுதல் பரிசுகளும் உதயன் வாசகர்களுக்காகக் காத்திருக்கின்றன.

(C/22328)


# எமக்கு உரிமை ...

(09ஆம் பக்க தொடர்ச்சி)
கிறார்கள். புலிகளை எதிர்க்கும் ஈ.பி.டி.பி. கட்சியினர் கூட தமது கட்சியின பெயரை ஈழம் என்றே ஆரம்பித்துள்ளனர். பிரபாகரனின் தலைமையில் இடைக்கால நிர்வாகத்தை கொழும்பிலுள்ள அரசு உருவாக்கவுள்ளது எனில் அதற்கு ஏன் காலத்தை வீணடிக்கிறது என்பதே எனது கேள்வியாகும.

*கேள்வி* :தற்போது ஜே.வி.பி. மற்றும் பொ.ஐ.முன்னணி இணைந்து சமாதான முயற்சிகளை எதிர்த்து வருவதுடன் "கௌரவமான சமாதானம்" குறித்து மக்களது கவனத்தை ஈர்த்து வருகின்றனர். ஜனாதிபதியும் பொ.ஐ.முன்னணியும் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு எனக்கூறினாலும் அது இதயசுத்தியுடன் கூறப்படும் கருத்து அல்ல எனச் சிலர் கூறுகின்றனர். ஜே.வி.பியினர் 1988ஐ போல் தேசியப் பிரச்சினை என்று கூறி மீணடும் கிளர்ச்சிகளில் ஈடுபடக்கூடும் என்றும் சிலர் கூறுகின்றனர். எதிர்க கட்சியினரின் 'சுத்துமாத்துக்கள் 'குறித்து நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

### ஜே. வி. பி. யினரின் கைதி சந்திரிகா!

*பதில்:* உண்மையில் நான் மிகவும் வேதனையடைகிறேன். சந்திரிகா, அவரது கணவர் விஜயகுமாரணதுங்க மற்றும் நாங்கள் எல்லோரும் இணைந்து ஐக்கிய சோஷலிச முன்னணியில் எடுத்த தீர்மானத்தை ஜனாதிபதி மறந்துவிட்டாரோ எனக் கேட்கத் தோன்றுகிறது. விஜயகுமாரணதுங்காவின் பெயரைக் கெடுக்கும் முயற்சிகளிலேயே அவரது வழித்தோன்றல்கள் ஈடுபட்டுள்ளனர்.

சந்திரிகா, ஜே.வி.பி.யினரின் கைதியாகிவிட்டார். ஜே.வி.பியினரால் ஒழுங்கு செய்யப்படும் சமாதான விரோதக் கூட்டங்களுக்கு ஜனாதிபதியின் பிரதிநிதியாக அனுராவே பங்குபற்றுகிறார். பேரியல் என்பவர் ஜனாதிபதியின் வலதுகை. இவர்கள் அனைவரும் சந்திரிகாவின் சேலையில் தொங்கிக் கொண்டிருக்கிறார்கள். 1988 மனிதப் படுகொலைகளைப் புரிந்த தேசப் பிரேமிகள் (ஜே.வி.பி.) இன்று வேறு பெயரில் அந்த வேலைகளை ஆரம்பித்துள்ளனர்.

விமல் வீரவன்ஸ போன்றவர்கள் வெட்கமின்றி ஒரே மேடையில் காடசிதருகின்றனர். இடதுசாரிக் கருததுக்களை குப்பையில் வீசிவிட்டு இன்று இனவாத, யுத்தவாத, முதலாளி வர்க்கத் தலைமையின் செல்லப்பிராணிகள்போல் செயற்படுகிறார்கள். இந்த நடவடிக்கைகளையெல்லாம் ஆயத்தப்படுத்திவிட்டே சந்திரிகா இந்தியா சென்று சோனியா போன்ற இந்தியத் தலைவர்களின் ஆதரவை பெற முயன்றுள்ளார். இல்லையேல் அவ்வளவு அவசரமாக ஜனாதிபதி இந்தியா செல்லவேண்டிய தேவை தான் என்ன?

1988இல் மேற்கொண்டதை இம்முறை மேற்கொள்ள வாய்ப்பு இல்லை. எத்தனை இளைஞர்களை ரயர் போட்டுக் கொளுத்தினர். அப்படியான ஜே.வி.பியினருக்கு மக்கள் மீண்டும் வாய்ப்பளிக்கமாட்டார்கள். ஜே.வி.பி. சிங்கள முதலாளித்துவக் கட்சியாக வளர முற்பட்டுளளது. இருப்பினும் இநநாடகததிற்கு நல்ல எதிர்காலமில்லை.... ★

## விஞ்ஞான ஆசிரியர் செயலமர்வு

யாழ்ப்பாணம்,மே30

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் உயர்தர வகுப்பில் விஞ்ஞான பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விஞ்ஞான பாடச் செயலமர்வு ஒன்று இன்று காலை9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் சகல விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாள்களையும் விஞ்ஞான பாட ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராஜா அறிவித்துள்ளார். (க-10)


## ஆவணப்படுத்தும் லிகிதர் உடன் தேவை

ஆவணப்படுத்தும் லிகிதர் (ஆண்) உடன் தேவை. நூலக அனுபவம், ஆங்கில மொழி அறிவுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். வேலை நாள்களில் சான்றிதழ்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

ஆளணி முகாமையாளர்,
*'உதயன்' பத்திரிகை பணிமனை,*
*361, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C/22330)



உ
ஸ்ரீராம ஜெயம்

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் மணவாளக் கோல அபிஷேகமும் திருவிழாவும்

*காலம்:* நாளை (31-05-2002) வெள்ளிக்கிழமை
காலை 8.00 மணிக்கு 1008 சங்காபிஷேகம்
மாலை 4.00 மணிக்கு திருக்கல்யாணம்
மாலை 6.00 மணிக்கு எம்பெருமான் வெளிவீதி உலா நடைபெறும்.

பக்தர்கள் அனைவரும் வருகை தந்து எம்பெருமான் அருள் பெறுக.

(4305) - அறங்காவலர் சபை.


# இரண்டாவது வருட நினைவலைகள்



## செல்வி கிருஷ்ணவேணி முருகேசு

(சாவகச்சேரி அம்பாள் பார்மஸி உரிமையாளரின் மகள்)

மலர்வு 08-03-1975
உதிர்வு 22-05-2000

திதி: 30-05.2002

ஆண்டுகள் இரண்டு ஆனாலும் ஆறாது
அக்கா உங்கள் பிரிவுத் துயர்!
உங்கள் நினைவுகளுடனேயே
என்றென்றும் நாம் வாழுகின்றோம்!

*முத்ததம்பி வீதி,*
*மானிப்பாய்.*

(4325)

- குடும்பத்தினர்.

## விளம்பரதாரர்களுக்கு...!

**கொழும்பில் இருந்துகொண்டே யாழ்ப்பாணத்தில் விளம்பரம் செய்வதற்கு அரிய வாய்ப்பு...**

**உதயன் நாளேடு**

இவ்வாய்ப்பினை வழங்குகின்றது.

- வர்த்தக விளம்பரங்கள்
- பிறந்தநாள் வாழ்த்துக்கள்
- நினைவஞ்சலிகள்
- மரண அறிவித்தல்கள்
- வேலைவாய்ப்பு அறிவித்தல்கள்

இப்பொழுது நீங்கள் கொழும்பிலிருந்து கொண்டே சிரமம் ஏதுமில்லாமல் உங்கள் அனைத்து விளம்பரங்களையும் உங்கள் உதயனில் பிரசுரிக்கலாம்.

*தொடர்புகளுக்கு:*

**சுடர்ஒளி**

36/2, பிரட்றிக்கா வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு 6.

தொ.பே./தொ.நகல்: 074-513112-5
E.mail: advt@sudaroli.com

(C/22332)


உ

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள**

## ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலய மஹா கும்பாபிஷேக தின மணவாளக்கோல விழா

நாளை (31-05-2002) வெள்ளிக்கிழமை நடைபெறும்.

நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| காலை | 7.00 மணிக்கு | நவோத்தர ஸகஸ்ர சங்காபிஷேகம் உபயம் திரு.ச.தணிகாசலம் ஜே.பி. |
| நண்பகல் | 12.00 மணிக்கு | மாகேஸ்வர பூஜை |
| பிற்பகல் | 2.00 மணிக்கு | திருக்கல்யாணம் |
| மாலை | 4.30 மணிக்கு | சுவாமி திருவீதியுலா வருதல் |

*அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபை,*
*ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய பரிபாலன சபை,*
*இந்து மன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

(4330)

## மாபெரும் காட்சி உதைபந்தாட்டம் 2002

**மன்னார் சென்.ஜோசப் அணியுடன்** பின்வரும் யாழ். அணிகள், பின்வரும் திகதிகளில் மோதவுள்ளன.

| திகதி | மைதானம் | அணியின் பெயர் |
|---|---|---|
| 01-06-2002 | ஸ்கந்தா | → ஊரெழு றோயல் |
| 02-06-2002 | நெல்லியடி ம.ம.வித். | → பருத்தித்துறை லீக். |
| 03-06-2002 | யா/மத்திய கல்லூரி | → பாஷையூர் சென்.அன்ரனீஸ் |
| 04-06-2002 | யா/அருணோதயா | → யங்ஹென்றீஸ், இளவாலை |

பிரவேசம் ரூ. 20/-

பழைய மாணவர் சங்கம்,
யா/அருணோதயா.

(4326)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர்
திரு.சி.தயாபரன் அவர்களின்
அன்புத் தாயார்

### திருமதி பூமணி சிவசுப்பிரமணியம்

அவர்கள் 28.05.2002 செவ்வாய்க்கிழமை சிவபதமெய்தினார்.

அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு நாம் ஆறுதல் கூறுவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
*யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.*

(C/22331)

## கண்ணீர் அஞ்சலி

எங்கள் கல்லூரியின் முன்னாள் ஆங்கில ஆசிரியை

### திருமதி ஜெயமலர் இரத்தினம்

nee.Mandalanayagam

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

*மானிப்பாய்.*

பாடசாலைச் சமூகம்,
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

(4324)

## பாஸ் நடைமுறையில் தளர்வு

தென்மராட்சி,மே30

உசன், விடத்தற்பளை ஆகிய பகுதிகளுக்குச் செல்வதற்கு பாஸ் பெறும் முறை படையினரால் தளர்த்தப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். அத்துடன் பேக்கரி வீதியும் பொதுமக்கள் பாவனைக்குத் திறந்து விடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

கண்டி வீதியிலிருந்து உசன் ஊடாகக் கெற்பேலிக்குச் செல்லும் வீதி இன்னமும் பொதுமக்கள் பாவனைக்குத் திறந்து விடப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## வாராந்த நிகழ்வு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த வெள்ளி நிகழ்வில் இவ்வார நிகழ்வாக ஞானச்சுடர் வைகாசி மாத மலர் வெளியீடு இடம் பெறவுள்ளது.

மலரின் மதிப்புரையை ஓய்வுபெற்ற அதிபர் திருமதி மங்கையர்க்கரசி சிற்றம்பலம் நிகழ்த்துவார். வெளியீட்டுரையை ஆசிரிய ஆலோசகர் திருமதி யோகேஸ்வரி கந்தசாமி நிகழ்த்துவார். (க)

## எயிட்ஸ் கருத்தரங்கு

வலி வடக்கு,மே30

சுகாதாரசேவைகள் திணைக்களத்தினால் 'எயிட்ஸ்' சம்பந்தமான ஒரு நாள் கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது

கிராம அலுவலர் பிரிவு ரீதியாக தெரிவுசெய்யப்பட்ட இளைஞர்கள், யுவதிகள் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொள்ளவுள்ளனர்.

(க-86)

## தாவீது அடிகளின் நினைவு தினம்

குருநகர்,மே30

பன்மொழி அறிஞர் தாவீது அடிகளின் 21ஆவது நினைவு தினம் எதிர் வரும் ஜூன் முதலாம் திகதியாகும் இவரது நினைவாக அன்று காலை 6.30மணிக்கு அருள் ஆச்சிரமத்தில் விசேட திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

இத்திருவழிபாட்டை யாழ்.கத்தோலிக்க இலக்கிய வட்டம் ஏற்பாடு செய்துள்ளது. (ம-51)


**விற்பனைக்கு**

புத்தம் புதிய CBZ HERO HONDA மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
15. கைலாசபிள்ளையார் கோயில் வீதி.
நல்லூர். (4320)

**நாகம்ஸ்** சுன்னாகம்

மாதவன், சிம்ரன், பிரகாஷ்ராஜ்
நடிப்பில்
**கன்னத்தில் முத்தமிட்டால்**
(ரீவர்ஸ்)
காட்சிகள்: 11.00,3.00 (புதிய நேரம்)
(4321)

**ராஜா** யாழ்ப்பாணம்

31.05.2002 - 50ஆவது நாள்
விஜய், பிரியங்கா சோப்ரா, விவேக்
நடித்த
**தமிழன்**
தினசரி: 10.30, 2.30
சனி, ஞாயிறு: 10.30, 2.30, 5.30 (பு.நே.)
27-05-2002 தொடக்கம் படம் பார்க்கும் 3 அதிர்ஷ்டசாலிகளுக்கு கடைசித் தினத்தில் பணப்பரிசில்கள் காத்திருக்கின்றன. ரிக்கெற்றுகளை கவனமாக வைத்திருக்கவும்.
(C/22146)

**நிறைஞ்சனாஸ்**
சங்கானை
LEONARD DIC APRIO
KATE WINSLET
**டைட்டானிக்**
(தமிழாக்கம்)
காட்சிகள்: 10.30, 2.30, 5.30
(C-22147)


# மரண அறிவித்தல்கள்

## வீரகத்தி சிற்றம்பலம்

கரவெட்டி 'குஞ்சியா வளவை'ப் பிறப்பிடமாகவும், கலட்டி 'கிறானியா வளவை' வசிப்பிடமாகவும்கொண்ட வீரகத்தி சிற்றம்பலம் அவர்கள் 28.05.2002 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, பொன்னையா, சின்னத்துரை, கனகசபை, கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் மனோகரன் (மல்லாவி), மனோகரி (கலட்டி), புஸ்பாகரன் (கரணவாய்), பிரபாகரன் (கனடா), தேவகி (கலட்டி), சரஸ்வதிதேவி (திருகோணமலை), உருத்திராதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வரத்தினம் (மல்லாவி), சர்வேஸ்வரதேவன் (மாலைதீவு), புஸ்பராணி (கரணவாய்), விஜயசுகி (கனடா), சிவராசா (மாலைதீவு), ஜெகநாதன் (திருகோணமலை), கைலைராஜன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2002) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சோனப்பு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
சி.புஸ்பாகரன்
(மகன்)

*கலட்டி,*
*கரவெட்டி.*

(4309)

## சுந்தரம் சுந்தரலிங்கம் (ஓவசியர்)

**[இளைப்பாறிய ஊழியர், கொக்குவில் கிராம சங்கம், நல்லூர் பிரதேச சபை (மின்பகுதி)]**

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த சுந்தரம் சுந்தரலிங்கம் 26.05.2002 ஞாயிற்றுக்கிழமை அமரத்துவமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம் - சோதிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் மனோகராணி அவர்களின் அன்புக் கணவரும் சுந்தரேசன்(ஜேர்மனி), வாசுகி, உமாபதி, யசோமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும் கணேசலிங்கம்(கனடா), சிவலிங்கம்(ஜேர்மனி), காலஞ்சென்ற சாந்தலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் செல்வரத்தினம் மனோன்மணியின் மருமகனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2002) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோண்டாவில் - இணுவில் காரைக்கால் இந்துமயானத்திற்குத் தகனத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு.மனோகரா்ணி
(மனைவி)

*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.*

(4319)

## திருமதி சரஸ்வதி இரத்தினம்

*(ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியை)*

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் வவுனியா, பூங்கா வீதியில் வசித்தவருமான திருமதி சரஸ்வதி இரத்தினம் அவர்கள் நேற்று (29.05.2002) புதன்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை இரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லப்பா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் சந்திரலிங்கம் (இலங்கை மின்சார சபை, வவுனியா), கணேசலிங்கம் (C.I.C. கொழும்பு), ரஞ்சிதபாவணி (கௌரி), ரவிந்திரலிங்கம், ஜெயகரன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் இந்திராதேவி, ரஞ்சிதமலர், புஸ்பநாதன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2002) வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் வவுனியா பூந்தோட்ட மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணேசலிங்கம்
(மகன்)

*இலங்கை மின்சார சபை குவாட்டர்ஸ்,*
*பூங்கா வீதி,*
*வவுனியா.*

(4315)

## திருமதி திலகவதி காசிலிங்கம் (கிச்சி)

உரும்பிராய் வடக்கைச் சேர்ந்தவரும் தற்போது (சதா பேக்கரி) முதலாம் ஒழுங்கை, உரும்பிராய் தெற்கில் வசித்தவருமான திருமதி திலகவதி காசிலிங்கம் (கிச்சி) அவர்கள் 24.05.2002 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காசிலிங்கம் (ஓய்வுபெற்ற அத்தியட்சகர் - கடதாசித் தொழிற்சாலை, வாழைச்சேனை) அவர்களின் அன்பு மனைவியும் கோகுலன் (ஆஸ்திரேலியா), ஸ்ரீரங்கன் (லண்டன்), யசோதா, நந்தகோபி (சித்த மருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நிர்மலோஜினியின் அன்பு மாமியாரும் திரு. திருமதி தர்மராஜா (மாரீசன்கூடல்) அவர்களின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.காசிலிங்கம்
(கணவர்)

*முதலாம் ஒழுங்கை,*
*உரும்பிராய் தெற்கு,*
*உரும்பிராய்.*

(4328)

## செல்லத்துரை செல்வநாயகம்

(சுன்னாகம் தேங்காய் வியாபாரி)

சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் சந்தை வளவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை செல்வநாயகம் 28.05.2002 செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - வள்ளியம்மையின் அன்பு மகனும் காலஞ்சென்ற சண்முகம் - புவனேஸ்வரியின் மருமகனும் ஸ்ரீரதியின் அன்புக் கணவரும் பபிதா (ஜேர்மனி), ராக்கிதா, வினோப்ராஜ், பிரதா, துக்ஷா ஆகியோரின் தந்தையும் விஜேயானந்தத்தின் (ஜேர்மனி) மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2002) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.சந்திரகாந்தன் (காந்தன்)
(சகலன்)

*சந்தை வளவு (வரியப்புலம்),*
*சுன்னாகம்.*

(4331)

# சடலம் அடையாளம் காணப்பட்டது

யாழ்ப்பாணம்,மே30

புங்குடுதீவுக் கடற்கரையில் கடந்த 27ஆம் திகதி கரை ஒதுங்கிய பெண் ணின் சடலம் அவரது கணவரால் அடையாளம் காணப்பட்டுள் ளது.

கிளிநொச்சி இரத்தினபுரத்தைச் சேர்ந்த அன்ரனி குயின் ஜெயதேவி (வயது 24) என்பவரே இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் ஒருவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

நேற்று யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்ற ஜெயதேவியின் கணவன் சைமன் அன்ரனி குயின் மனைவியின் சடலத்தை அடையாளம் காட்டினார்.

சடலத்தைப் பொறுப்பேற்கும் பொருட்டு இவர் நேற்று ஊர்காவற்றுறைப் பொலீஸ் நிலையத்திற்கு சென்றிருந்தார்.

சடலம் இன்று நடைபெறும் விசாரணையை அடுத்து அவரிடம் வழங்கப்படும் என ஆஸ்பத்திரி வட்டாரத்தில் இருந்து தெரியவந்தது.

இதேவேளை - தனது மனைவியுடன் வந்த ரஜிதா என்ற 6மாதக் குழந்தையின் நிலை பற்றித் தெரியவரவில்லை என்று கணவர் கூறினார்.

தமது மற்றொரு பிள்ளையை இந்தியாவில் உறவினர்களிடம் விட்டு வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

(ம-15)

---

## அனுருத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுத்கமகே, திலின தென்னகோன் ஆகியோர் சரீரப் பிணைக்குக் கையொப்பமிட்டனர்.

ரத்வத்தையின் கடவுச்சீட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது.

பிரதி சனிக்கிழமைதோறும் கொழும்பில் இரகசியப் பொலீஸ் பிரிவில் அவரைக் கையொப்பமிடுமாறு உத்தரவிட்ட நீதிவான் எதிர்வரும் 3ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் பணித்தார்.

இவர் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டதையொட்டி நீதிமன்றத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இது இவ்வாறிருக்க கண்டி பிரதான பொலீஸ் நிலையம் எதிரே உள்ள மதில்களில் "வீர சேனாதிபதியே! மக்களின் வாழ்த்துக்கள் உங்களுக்கு! சத்தியம் வென்றது!!" என்று சிங்களத்தில் எழுதப்பட்ட அவரது புகைப்படங்களுடனான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. பிணையில் விடுவிக்கப்பட்ட அவர் மகியாவையில் உள்ள தனது வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றார். (ம)

---

## மின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 27ஆம் திகதி உயிரிழந்தார் என்பது தெரிந்ததே.

வீட்டில் 'அன்ரனா' பொருத்திக் கொண்டிருந்த சமயம் அது சரிந்து உயர் அழுத்த மின்சாரம் செல்லும் கம்பிகளில் முட்டியதில் அதனைப் பிடித்திருந்த சகோதரர்கள் மூவரும், அவர்களைக் காப்பாற்றச் சென்ற தாயாரும் மின் தாக்குதலுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தனர்.

தாயாரும் ஒரு சகோதரியும் தொடர்ந்தும் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

(ம-6)

# பாடசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாலைகளுக்கு விஜயம் செய்யவுள்ளார். அமைச்சர் அங்கு 6 பாடசாலைகளில் நூலகங்களைத் திறந்து வைக்கவுள்ளார்.

பிற்பகல் 3.30 மணியில் இருந்து யாழ். நகரப் பகுதியில் உள்ள சில பாடசாலைகளுக்கு விஜயம் செய்து அங்கும் 3 பாடசாலைகளில் நூலகங்களைத் திறந்துவைப்பார்.

மாலை 5 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் நிகழ்வில் கலந்துகொள்ளும் அமைச்சர், அங்கு வைத்து குடாநாட்டில் உள்ள 23 பாடசாலைகளுக்கு கணனிகளை வழங்குவதுடன் '1ஏபி' பாடசாலைகளுக்கு விஞ்ஞான பாடநூல்களையும் கையளிக்கவுள்ளார்.

அமைச்சருடன் மாகாணக் கலவி அமைச்சின் செயலாளர் கே.சண்முகலிங்கம், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஐ.எம். இஸ்மைன் மற்றும் அமைச்சின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் ஆகியோரும் வருகை தரவுள்ளனர்.

(ம-10)

---

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறையிட்டுள்ளனர். ஆனால், இருவர் குறித்தும் இதுவரை எதுவித தகவலும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா மனித உரிமை ஆணைக்குழுவினர் இது குறித்து வவுனியா இராணுவத்திடமும் பொலீஸிடமும் மற்றும் வவுனியா விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பிரிவினிடமும் அறிவித்திருக்கின்றனர்.

இவர்களைத் தாம் கைது செய்யவில்லை என்று இராணுவத்தினர் கூறியுள்ளனர். இவர்கள் தமது அமைப்பில் இணைந்து கொள்ளவில்லை என்று விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

வவுனியா பொலீஸார் இதுபற்றி விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கிடையே, மனித உரிமை ஆணைக்குழுவுக்கு இவர்கள் தொடர்பாக முரணான தகவல்கள் கிடைத்திருக்கின்றன என்று மனித உரிமை ஆணைக்குழுவின் வவுனியா அதிகாரி லோகித்த தெரிவித்தார். (ம)

---

## 58 மீறல்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்தே கூடுதலான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. பொதுமக்களைப் புலிகள் துன்புறுத்துவதாகவே அந்த முறைப்பாடுகளில் அதிகமானவை அமைந்திருந்தன என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

யுத்தநிறுத்த உடன்பாட்டை மீறும் வகையிலான முறைப்பாடுகளின் எண்ணிக்கை வருமாறு:-

யாழ்ப்பாணம் - 16, மன்னார் - 1, வவுனியா - 2, திருமலை - 9, மட்டக்களப்பு - 30, அம்பாறை - 6.

சாதாரண வகையிலான முறைப்பாடுகளின் எண்ணிக்கை வருமாறு:-

யாழ்ப்பாணம் - 8, மன்னார் - 11, வவுனியா - 23, திருமலை - 54, மட்டக்களப்பு - 37, அம்பாறை - 16.

- என்ற வகையில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் கண்காணிப்புக் குழு கூறியுள்ளது.

சாதாரண முறைப்பாடுகள் - 196 என்றும் - தெரிவிக்கப்பட்டது.

(ம-3-4)

---

## பொது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதிப்பிடவேண்டியுள்ளது.

இராணுவத்தினர் முக்கிய அம்சங்களில் இருந்து விலகி ஆக்கிரமிப்புத் தன்மைமிக்க நிலைப்பாட்டை எடுத்துள்ளனர். இவை சமாதான முயற்சிகளைச் சீர்குலைத்துவிடலாம்.

- என்றார் பாலசிங்கம். (ம-4)

---

## கண்காணிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விதித்துள்ளனர்.

இந்த நிபந்தனைகளை தம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாதென்று விடுதலைப் புலிகள் தெரிவித்துவிட்டனர்.

நிபந்தனை எதுவும் இன்றி சுதந்திரமாக அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடத் தாம் அனுமதிக்கப்படவேண்டும் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்குத் தீர்வுகாணவே ஜெனரல் புருகோவிட் நாளை யாழ்ப்பாணம் வருகின்றார்.

தீவுப் பகுதியில் வாழும் பொது மக்கள் குறித்தும் அங்கு நிலைகொண்டுள்ள - விடுதலைப் புலிகளின் எதிராளிகளான - ஈ.பி.டி.பியின் 160 உறுப்பினர்கள் குறித்தும் தாம் கவலைப்படுவதாகவும் -

விடுதலைப் புலிகளுக்கும் ஈ.பி.டி.பிக்கும் இடையில் மோதல் ஏற்பட்டால் சமாதான முயற்சிகள் முற்றாகப் பாதிக்கப்படும் எனக் கருதுவதாகவும் - அரச அதிகாரிகள் கூறியதாக பி.பி.ஸி. தமிழோசை தெரிவித்தது.

(ம-3-4)

---

## ஆயுதங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு இராணுவத்தினர் ஆயுதங்களுடன் வந்தது குறித்து மக்கள் புலிகளின் அரசியல் செயலகத்துக்கு அறிவித்தனர். இதனை ஊர்ஜிதம் செய்துகொண்ட புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கண்காணிப்புக் குழுவினருக்கு இதுகுறித்து எழுத்துமூலம் அறிவித்தார்.

படையினரின் இவ்வாறான அத்துமீறல் சம்பவங்கள் நல்லுறவுக்கும் மக்களின் அமைதியான வாழ்வுக்கும் குந்தகம் விளைவிக்கும் என்று துரை கூறினார். (ம)

---

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குச் சென்றிருந்தனர். அவர்கள் மத்தியில் பேசுகையிலேயே கரிகாலன் இவ்வாறு தெரிவித்தார்.

கரிகாலன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

போராட்டம் ஆரம்பமானது முதற்கண் நில அபகரிப்பைத் தடுக்கவே. 1985திம்புப் பேச்சுவார்த்தையின் போது தமிழ்மக்களின் நிலம் பறிக்கப்பட்டு தெகியத்திய கண்டிய பிரதேச செயலகப் பிரிவு உருவாக்கப்பட்டது.

தற்போது கோறளைப்பற்று மத்திய செயலகப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இரு சமூகங்களையும் தூண்டிவிட்டு அரசு குழப்ப முயற்சிக்கலாம். ஆனால், நாம் புரிந்துணர்வு உடன்படிக்கையை எக்காரணம் கொண்டும் மீறமாட்டோம். 70 சதவீதம் தமிழர்கள் மகாவலி ப வலய நிலப்பரப்பில் குடியமர்த்தப்பட வேண்டும். ஆனால், ஒரு சதவீதமேனும் இது நடைபெறவில்லை. சமாதான சூழலைப் பயன்படுத்தி எமது மக்களை மீளக் குடியமர்த்த வேண்டும். இப்படி அவர் கூறினார்.

புலிகளின் இராணுவத் தளபதி றொபட், விசு, கௌசல்யன், துரை ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(ம)


SPOKEN ENGLISH
WITH
GRAMMAR

*Lectures By:* **Mr.M.A.HARI**

* புதிய பிரிவு ஆரம்பம் *

01-06-2002 சனி மாலை 2 மணி

Saturday / Sunday } 2 p.m. - 3 p.m.

(4284)

ஆனைப்பந்தியடி, நாவலர் கல்வி நிலையம் யாழ்ப்பாணம்.



ஈசன் கல்வி நிலையம்

A/L 2003 PAPER CLASS

(A/L 2002 பரீட்சை எடுத்த மாணவர்களுக்கானது)

| CHEMISTRY | PHYSICS |
|---|---|
| திரு.சிவத்திரன் B.Sc. | திரு.குமரன் B.Sc. |
| Mon., Tue. - 3.30p.m. | Mon., Tue. - 5.00p.m. |

ஆரம்பம்: 03.06.2002 (Mon.) 3.30 p.m.

பௌதிகவியல்

A/L 2003, 2004

திரு.குமரன் B.Sc.

| காந்தப்புலம் | இலத்திரனியல் |
|---|---|
| Fri.: 6.30 a.m., 5.00 p.m. | Sat., Sun.: 4.30 p.m. |
| ஆரம்பம்: 31-05-2002 (Fri.) 5.00 a.m. | ஆரம்பம்: 01-06-2002 (Sat.) 4.30 p.m. |

(4323)



சர்வதேச இந்து மத குருமார் ஒன்றிய
10ஆவது ஆண்டு நிறைவு விழா

இடம் : ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேய கோயில், இணுவில், மருதனார்மடம்.

காலம் : வைகாசித் திங்கள் 18ஆம் நாள் (01.06.2002) சனிக்கிழமை.

நேரம் : பிற்பகல் 2 மணி (நியம நேரம்)

தலைவர் : பிரம்மஸ்ரீ ப.மனோகரக் குருக்கள் (தலைவர், சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்)

நூல் வெளியீடு : 'அனுஸ்மரணம்' (ஸ்தோத்திரங்கள்)

பாராட்டு :

இலங்கையின் பல பாகங்களிலும் ஆலயங்களில் சர்வசாதகாச்சாரியாராக விளங்கி கிரியைகளை நெறிமுறைப்படுத்துவதில் புகழ்பெற்ற தர்மஸாஸ்தா குருகுலத்தைச் சேர்ந்த **பிரம்மஸ்ரீ செ.சிவபாலசர்மா** அவர்களுக்கு (இணுவில்) *"வேதாகம சாதக பூஷணம்"* என்னும் சிறப்புப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு.

*சிறப்புப் பட்டம் பெறும் விழா நாயகனைப் பாராட்ட விரும்புவோர் நிகழ்வில் கலந்து கௌரவிக்கலாம் என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.*

அந்தணப் பெரியோர்கள்/ஆலய தர்மகர்த்தா/நிர்வாக சபை ஏனைய சைவப் பெரியோர்களையும்

*வருக! வருக! என அன்புடன் அழைக்கின்றோம்.*

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம், *யாழ்ப்பாணம்.*

(4299)



IIS

புதிய பிரிவுகள்

அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, நிறுத்தப்பட்டிருந்த அனுமதிகள் தளர்த்தப்பட்டு, அனைத்து Diploma கற்கைநெறிகளுக்கும் 2ஆவது புதிய பிரிவுகள் 02.06.2002 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட இருக்கின்றது என்பதை மாணவர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.

(C/22303)



NIRU TUTION CENTRE

Kondavil

A/L

PHYSICS

Paper Class

ஆரம்பம்: 01.06.2002 சனி 3.30p.m.

ஆசிரியர்:

திரு.S.சோதிலிங்கம்

(4290)



இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 21 ௨ 04 ௨ 1954



விண்ணில் 30 ௨ 05 ௨ 2000

அமரர் இராசதுரை கமலநாதன் (ராசா)

*(உரிமையாளர், சகானா புத்தக நிலையம், மருந்தகம் - சாவகச்சேரி, முன்னாள் தலைவர் - லயன்ஸ் கழகம்)*

திதி: 07.06.2002

அன்புக்கும் பாசத்துக்கும் இருப்பிடமான
எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே!
இரண்டாண்டுகள் உருண்டோடினும்
உங்கள் நினைவிலேயே உயிர் வாழ்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

ஈசன் *(தம்பி)*
*யதூஷ் வீடியோ,*
*15/12, மாரி அம்மன் வீதி,*
*திருநெல்வேலி.*

- மனைவி,
பிள்ளைகள்,
சகோதரர்கள்,
மைத்துனர்கள்.

(4318)



மரண அறிவித்தல்

**தனபாலசிங்கம் கலைச்செல்வி (செல்வி)**

விழிசிட்டியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி வளாக வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கலைச்செல்வி தனபாலசிங்கம் அவர்கள் நேற்று (29.05.2002) புதன்கிழமை மாலை 7.30மணிக்கு அகாலமரணமானார்.

அன்னார் தனபாலசிங்கம் - சிவயோகநாயகி தம்பதிகளின் அன்புப் புதல்வியும் தயாநிதி, கலைவாணி (கலா), காலஞ்சென்ற தயாபரன் (தயா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2002) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வளாக வீதி,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
மா.தனபாலசிங்கம்
(தந்தை)

(4333)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.05.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.